சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

# இந்து சமய அறநிலையங்கள்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2021–2022

### மானியக் கோரிக்கை எண். 47


## பி.கே. சேகர்பாபு
இந்து சமயம் மற்றும்
அறநிலையத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2021

## சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

## இந்து சமய அறநிலையத்துறை

## மானியக் கோரிக்கை எண்.47
## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2021-2022

### பொருளடக்கம்


| பொருள் | பக்க எண் |
|---|---|
| **முன்னுரை** | 1 |
| **I – சட்டமும், நிருவாக அமைப்பும்** | **3-39** |
| தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959 | 3 |
| இந்து சமய நிறுவனங்கள் | 6 |
| இந்து சமய நிறுவனங்களின் வகைப்பாடு | 7 |
| சகாயத்தொகை மற்றும் தணிக்கைக் கட்டணம் | 8 |
| நிருவாக கட்டமைப்பு | 10 |
| மண்டல மற்றும் கோட்ட அளவிலான நிருவாகம் | 14 |
| இணை ஆணையரின் பணிகள் | 20 |

| பொருள் | பக்க எண் |
|---|---|
| உதவி ஆணையரின் பணிகள் | 22 |
| ஆய்வரின் பணிகள் | 23 |
| சரிபார்ப்பு அலுவலர்கள் | 24 |
| பொறியியல் பிரிவு | 25 |
| திருக்கோயில் நிருவாகம் | 27 |
| செயல் அலுவலர்கள் | 28 |
| கணக்குகளும் தணிக்கையும் | 29 |
| திருக்கோயில்களில் பொறியியல் பிரிவு | 30 |
| திருமடங்கள் | 30 |
| அரசு ஆலோசகர்களாக மடாதிபதிகளின் முக்கியத்துவம் | 31 |
| இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கை | 32 |
| ஆலோசனைக் குழு | 34 |
| மாவட்ட குழு அமைத்தல் | 35 |
| அறங்காவலர்கள் நியமனம் | 35 |
| அறங்காவலர் நியமனத் தகுதிகள் | 36 |

| பொருள் | பக்க எண் |
|---|---|
| அறங்காவலர்களை நியமிப்பதற்கான அதிகாரம் | 37 |
| தக்கார் நியமனம் | 39 |
| **II – இந்து சமய அறநிறுவனங்களின் அசையாச் சொத்துக்களின் நிருவாகம்** | **39–45** |
| நில விவரங்கள் | 39 |
| நியாய வாடகை நிர்ணயம் | 41 |
| வருவாய் நீதிமன்றங்கள் | 42 |
| நிலங்களை மீட்டல் | 43 |
| ஓய்வுபெற்ற துணை ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள் மற்றும் நில அளவையர்கள் நியமனம் | 44 |
| ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் | 45 |
| கூட்டு ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துதல் | 45 |
| **III – திருப்பணி** | **46–67** |
| திருப்பணி (புதுப்பித்தல் மற்றும் பாதுகாத்தல்) | 46 |
| திருப்பணி மற்றும் கட்டுமானப் பணிகளுக்கான நிதி ஆதாரங்கள் | 46 |

| பொருள் | பக்க எண் |
| --- | --- |
| அரசு மானியம் | 47 |
| இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாக நிதி | 47 |
| பொது நல நிதி | 48 |
| ஆலய மேம்பாட்டு நிதி | 48 |
| பிற திருக்கோயில்களின் உபரி நிதி மாற்றம் | 49 |
| கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி | 49 |
| திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி | 50 |
| நன்கொடைகள் | 50 |
| ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்கள் திருப்பணி நிதி | 51 |
| சுற்றுலாத்துறை நிதி | 51 |
| பழைமை வாய்ந்த திருக்கோயில்களைப் பாதுகாத்தல், பழைமை மாறாது புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கத் திருப்பணி | 52 |
| வரைபடக் குழு | 53 |
| சுவரோவியங்களை புதுப்பித்தல் மற்றும் பாதுகாத்தல் | 54 |

| பொருள் | பக்க எண் |
|---|---|
| திருக்குளங்களை சீரமைத்தல் மற்றும் மழைநீர் சேகரித்தல் | 54 |
| பட்டயப் பொறியாளர்களைப் பட்டியலிடுதல் | 55 |
| ஸ்தபதிகளைப் பட்டியலிடுதல் | 55 |
| குடமுழுக்கு (கும்பாபிஷேகம்/சம்ப்ரோக்ஷணம்) | 56 |
| மரத்திருத்தேர் | 66 |
| தங்கரதம் மற்றும் வெள்ளிரதம் உள்ள திருக்கோயில்கள் | 57 |
| **IV – சிறப்புத் திட்டங்கள்** | **67–76** |
| அனைத்து சாதியினருக்கும் அர்ச்சகர் பணி நியமனம் | 67 |
| கலைஞர் தலமரக்கன்றுகள் நடும் திட்டம் | 68 |
| அன்னைத் தமிழில் அர்ச்சனை | 69 |
| அன்னதான திட்டம் | 71 |
| போக் சான்றளித்தல் (BHOG Certification) | 71 |
| நோய் பெருந்தொற்று காலத்தில் ஏழைகளுக்கு உணவு வழங்குதல் | 72 |

| பொருள் | பக்க எண் |
|---|---|
| ஆன்மிகம் மற்றும் ஒழுக்கநெறி வகுப்புகள் | 72 |
| சிறப்பு வழிபாடும் பொது விருந்தும் | 73 |
| யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் | 73 |
| மின்கல சிற்றுந்துகள் | 74 |
| கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்களுக்கான அரசு மானியம் | 75 |
| புதுக்கோட்டை தேவஸ்தான திருக்கோயில்களுக்கான அரசு மானியம் | 76 |
| ஒரு கால பூஜை திட்டம் | 76 |
| **V – பக்தர்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகள்** | **77–79** |
| தங்கும் விடுதிகள் | 77 |
| பக்தர்களுக்கு உயர்தர விபூதி மற்றும் குங்குமம் வழங்குதல் | 77 |
| மானசரோவர் மற்றும் முக்திநாத் புனிதப் பயணம் | 78 |
| சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்குதல் | 79 |

| பொருள் | பக்க எண் |
|---|---|
| திருக்கோயில்களில் நூல் நிலையங்கள் | 79 |
| **VI – திருக்கோயில்களில் தூய்மை மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு** | **80–81** |
| உழவாரப் பணி (திருக்கோயில் பகுதிகளைத் தூய்மைப்படுத்தும் பணி) | 80 |
| திருக்கோயில் வளாகத்தில் நெகிழி (Plastic) பயன்பாட்டினைத் தடை செய்தல் | 80 |
| **VII – பாதுகாப்பு நடவடிக்கைகள்** | **81–88** |
| திருக்கோயில்கள் பாதுகாப்பு | 81 |
| உலோகத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்தவைகள் பாதுகாப்பு | 81 |
| பாதுகாப்பு அறைகள் | 86 |
| களவு எச்சரிக்கை மணி பொருத்தும் திட்டம் | 87 |
| திருக்கோயில் பாதுகாப்புப் படை | 87 |
| திருக்கோயில்களில் தீத்தடுப்பு நடவடிக்கைகள் | 88 |
| **VIII – கல்வி மற்றும் அறப்பணிகள்** | **88–98** |
| கல்வி நிறுவனங்கள் | 88 |

| பொருள் | பக்க எண் |
|---|---|
| காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை | 95 |
| ஓதுவார் பயிற்சி பள்ளிகள் | 96 |
| சமூக நல நிறுவனங்கள் | 96 |
| பள்ளி, கல்லூரிகளுக்கு அடிப்படை வசதிகள் | 97 |
| கோசாலைகள் (பசு பாதுகாப்பு மையங்கள்) | 98 |
| **IX – அருளாளர்கள் விழா** | **98–102** |
| சேக்கிழார் விழா | 98 |
| திருஞானசம்பந்தர் இசை விழா | 99 |
| ஔவையார் விழா | 99 |
| தாயுமானவர் விழா | 100 |
| திருவள்ளுவர் திருநாள் | 100 |
| அருணகிரிநாதர் விழா | 101 |
| கோச்செங்கட்சோழ நாயனார் விழா | 101 |
| ஆழ்வார்கள் விழா | 102 |
| பாவை விழா | 102 |

| பொருள் | பக்க எண் |
|---|---|
| **X – வெளியீடுகள்** | **103–105** |
| தலவரலாறு மற்றும் தலபுராணம் | 103 |
| பயணியர் மாவட்ட கையேடுகள் | 103 |
| "திருக்கோயில்" திங்களிதழ் | 104 |
| ஆகம நூல்கள் மற்றும் இதர நூல்கள் தமிழில் வெளியிடுதல் | 104 |
| **XI – பயிற்சித் திட்டங்கள்** | **105–106** |
| புத்தொளிப் பயிற்சி | 105 |
| யோகாசன வகுப்புகள் | 105 |
| **XII – திருக்கோயில் பணியாளர்களுக்கான நலத்திட்டங்கள்** | **106–112** |
| நலத்திட்ட விவரங்கள் | 106 |
| குடும்ப நல நிதி திட்டம் | 107 |
| திருக்கோயில் பணியாளர்கள் நலநிதி | 107 |
| கருணை அடிப்படையில் பணிநியமனம் | 108 |
| இசைவாணர்கள் நியமனம் | 109 |

| பொருள் | பக்க எண் |
|---|---|
| அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணர், அரையர், திவ்யப்பிரபந்தம் பாடுவோர், இசைக் கலைஞர்கள் ஆகியோருக்கான ஓய்வூதியத் திட்டம் | 109 |
| திருக்கோயிலில் பணிபுரியும் இதர பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | 110 |
| குடும்ப ஓய்வூதியம் | 111 |
| **XIII – கிராமக்கோயில் பூசாரிகள் நலத் திட்டம்** | **112–113** |
| கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம் | 112 |
| கிராமக்கோயில் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டம் | 112 |
| **XIV – துறை மற்றும் திருக்கோயில்களின் செயல்பாடுகளை கணினிமயமாக்குதல்** | **113–116** |
| **நிறைவுரை** | **116–117** |

# சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

## இந்து சமய அறநிலையத்துறை

## மானியக் கோரிக்கை எண்.47

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2021-2022

**முன்னுரை**

தமிழகம் எண்ணற்ற புகழ்வாய்ந்த கோயில்களின் இருப்பிடம். 'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கக் கூடாது' என்கிற பொன்மொழி தமிழ்நாட்டில் உண்டு. இக்கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாக மட்டும் இல்லாமல் மக்கள் கூடும் மையங்களாகவும், பேரிடர் காலங்களில் புகலிடங்களாகவும், மன்னர்களின் மன்றங்களாகவும், வரலாற்றைப் பதித்து வைக்கும் ஆவணங்களாகவும், கல்வியைக் கற்றுத் தரும் பல்கலைக்கழகங்களாகவும், கலைகளைப் பத்திரப்படுத்தும் அருங்காட்சியகங்களாகவும், கலைகளை நிகழ்த்தும் காட்சிக் கூடங்களாகவும், மனதை அமைதிப்படுத்தும் தியானக் கூடங்களாகவும்

திகழ்ந்தன. இக்கோயில்களின் மூலம் தமிழ்நாட்டின் இடைவிடாத கலைத்தொடர்ச்சியை நாம் அறிந்துகொள்ள முடிகிறது. ஒரு காலத்தில் சொற்பொழிவுகளும், இசையரங்குகளும், நடன நிகழ்ச்சிகளும் பெருமளவில் நிகழ்ந்து மக்களை நல்வழிப்படுத்துகிற இடங்களாக இவை திகழ்ந்தன.

பண்டைய மன்னர்கள், பெருங்கொடையாளர்கள் மற்றும் பக்தர்கள் திருக்கோயில்களுக்கு நிலங்களை வழங்கியும், கட்டடங்களை எழுப்பியும், தங்கம், வெள்ளி மற்றும் பலவிதமான பிற விலையுயர்ந்த சொத்துக்களையும் மிகப்பெரும் அளவில் கொடையாக வழங்கினர். திருக்கோயில்கள் நீடித்து நிலைபெறத்தக்க வழிபாட்டுத் தலங்களாகவும் பல்லாண்டுளாக இறையன்பர்களுக்கு பல்வேறு வசதிகளை செய்து தருவதற்கு வாய்ப்பான இடங்களாகவும் இருந்து வருவதற்கு இச்சொத்துக்களே காரணமாக விளங்கி வருகின்றன.

இத்தகைய விலை மதிக்க முடியாத திருக்கோயில்களின் சொத்துக்கள் முறையான பேணுகையுடன் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும், சமயத் தலைவர்கள் கற்பித்துள்ள பல்வேறு

மரபுகளையும் நடைமுறைகளையும் கைக்கொண்டு பேணப்பட்டு வருவதுடன் அவற்றின் தேவைகளையும் கருதி, அவை பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தினசரி பூஜை முறைகள், வழிபாடுகள், காலமுறைத் திருவிழாக்கள், திருக்கோயில் புதுப்பிப்பு மற்றும் பாதுகாப்புப் பணிகள் ஆகியவை திருக்கோயில்களுக்கென விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகளுடன் கவனமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பக்தர்களின் இறையுணர்வைப் பெருக்கிடவும், அவர்களுக்கு வேண்டிய வசதிகளை மேம்படுத்தவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## I – சட்டமும், நிருவாக அமைப்பும்

### தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959

2. திருக்கோயில்கள், திருமடங்கள் மற்றும் அறக்கட்டளைகள் ஆகியவற்றின் பொதுவான கூறுகளின் முறையான நிருவாகத்தை அரசு கண்காணிக்கவும் உறுதிசெய்யவும் தமிழ்நாடு அரசு முந்தைய சட்டங்களின் பல்வேறு கூறுகளையும் ஆய்வு செய்த பிறகு, 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு

இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம் (சட்டம் 22/1959) என்றவொரு சட்டத்தை இயற்றியது.

3. இச்சட்டம், ஏற்கனவே இயற்றப்பட்ட பல்வேறு முந்தைய சட்டங்களின் தொடர்ச்சியாகும். முதலில் மதராஸ் நிலைக் கொடைகள் மற்றும் வாரிசு இன்மையால் அரசுப் பொருட்கள் ஒழுங்குறுத்தும் சட்டம் எண்.VII/1817 உருவாக்கப்பட்டது. இச்சட்டம், சட்டம் XX/1863 மூலம் நீக்கப்பட்டது. பின்னர், மதராஸ் இந்து சமய அறக்கொடை சட்டம், 1926 (சட்டம் II/1927) இச்சட்டத்திற்கு மாற்றாக நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி மதராஸ் இந்து சமய அறநிலைய வாரியம் உருவாக்கப்பட்டது. 1951–ல் சட்டம் XIX–ன்படி, வாரியம் ரத்து செய்யப்பட்டு அதற்கு பதிலாக இந்து சமய அறநிலையங்கள் மற்றும் அறக்கொடைகள் நிருவாகத்துறை உருவாக்கப்பட்டு, இந்து சமய அறநிறுவனங்கள் மற்றும் அறக்கொடைகளை நிருவகிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இத்துறை ஆணையரைத் தலைவராகக் கொண்டு பல நிலைகளில் அலுவலர்களுக்கு அதிகார வரம்புகள் வரையறுக்கப்பட்டது. இச்சட்டத்தின் காப்புரைகள்

சமண சமய நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 1951–ஆம் ஆண்டு சட்டம் நீக்கம் செய்யப்பட்டு, அதற்கு பதிலாக தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959 (சட்டம் 22/1959) இயற்றப்பட்டது.

4. இந்து சமய நிறுவனங்களை நிருவகித்திட பல்வேறு வழிவகைகளையும், அவற்றை செயல்படுத்திட தேவையான அதிகாரங்களையும், கடமைகளையும் இந்து சமய அறநிலையத்துறையின் ஆணையர் மற்றும் சார்நிலை அலுவலர்களுக்கு இச்சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளில் வரையறை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டம் இந்து சமய அறநிறுவனங்களின் நிருவாகத்தை சீராக மேம்படுத்துவதற்கான பல்வேறு வழிமுறைகளைக் கொண்டுள்ளது. மேலும், இச்சட்டம் இந்து சமய அறநிறுவனங்களின் நிதி நிலையை உயர்த்துவதற்கும், அவற்றின் சீரான மேம்பாட்டுக்கும் வழிவகுக்கிறது.

**இந்து சமய நிறுவனங்கள்**

5. இந்து சமய அறநிலையத்துறை நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் 38,667 இந்து சமய மற்றும் சமண சமய நிறுவனங்கள் உள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:–

**இந்து சமய அறநிலையத்துறையின் கீழுள்ள நிறுவனங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | திருக்கோயில்கள் | 36,627 |
| 2. | மடங்கள் | 56 |
| 3. | திருமடத்துடன் இணைந்த திருக்கோயில்கள் | 57 |
| 4. | குறிப்பிட்ட அறக்கட்டளைகள் | 1,721 |
| 5. | அறக்கட்டளைகள் | 189 |
| 6. | சமணத் திருக்கோயில்கள் | 17 |
| | **கூடுதல்** | **38,667** |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அறநிறுவனங்களின் உபதிருக்கோயில்கள், கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்கள் நிருவாகத்தின் கீழ் உள்ள

இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள், புதுக்கோட்டை மாவட்ட (சமஸ்தானத்தைச் சேர்ந்த) திருக்கோயில்கள் நிருவாகத்தின் கீழ் உள்ள திருக்கோயில்களையும் சேர்த்து மொத்த திருக்கோயில்கள் எண்ணிக்கை 44,291 ஆகும்.

## இந்து சமய நிறுவனங்களின் வகைப்பாடு

6. இந்து சமய நிறுவனங்கள் அதன் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில், பட்டியலைச் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் பட்டியலைச் சாராத நிறுவனங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:–

**இந்து சமய நிறுவனங்களின் வகைப்பாடு**

| வ. எண் | வகைப்பாடு | ஆண்டு வருமானம் | நிறுவனங்கள் எண்ணிக்கை மற்றும் சதவீதம் (%) |
|---|---|---|---|
| 1. | பட்டியலைச் சாராத நிறுவனங்கள் – சட்டப்பிரிவு 49(1) | ரூ.10,000/–க்கு குறைவாக | 34,111 88.22% |

| | | | |
|---|---|---|---|
| 2. | பட்டியலைச் சார்ந்த நிறுவனங்கள் – சட்டப்பிரிவு 46(i) | ரூ.10,000/–லிருந்து ரூ.2 இலட்சத்திற்கு குறைவாக | 3,528<br>9.12% |
| 3. | சட்டப்பிரிவு 46(ii) | ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சத்திற்கு குறைவாக | 492<br>1.27% |
| 4. | சட்டப்பிரிவு 46(iii) | ரூ.10 இலட்சமும் அதற்கு மேலும் | 536<br>1.39% |
| | | **கூடுதல்** | **38,667** |

## சகாயத் தொகை மற்றும் தணிக்கைக் கட்டணம்

7. சட்டப்பிரிவு 92(1)–ன் கீழ் சகாயத் தொகையும், சட்டப்பிரிவு 92(2)–ன் கீழ் தணிக்கைக் கட்டணமும் சமய நிறுவனங்களிடமிருந்து இந்து சமய அறநிலையத் துறையின் உதவி ஆணையர்கள் வழியாக பெறப்பட்டு இந்து சமய அறநிலைக்கொடைகள் நிருவாக நிதிக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன. சகாயத் தொகை மற்றும்

தணிக்கைக் கட்டண விகிதங்களின் அளவு பின்வருமாறு:–

**சகாயத் தொகை சட்டப்பிரிவு 92(1)**

| வ.எண் | ஆண்டு வருமானம் | விழுக்காடு (%) |
|---|---|---|
| 1. | ரூ.5,000/–க்கும் குறைவாக உள்ளவற்றிற்கு | --- |
| 2. | ரூ.5,000/–க்கும் மேலாக, ரூ.20,000/–க்கு மிகாமல் உள்ளவற்றிற்கு | 4% |
| 3. | ரூ.20,000/–க்கும் மேலாக ரூ.60,000/–க்கு மிகாமல் உள்ளவற்றிற்கு | 5% |
| 4. | ரூ.60,000/–க்கும் மேலாக ரூ.2,00,000/–க்கு மிகாமல் உள்ளவற்றிற்கு | 6% |
| 5. | ரூ.2,00,000/–க்கும் மேலாக ரூ.5,00,000/–க்கு மிகாமல் உள்ளவற்றிற்கு | 7% |
| 6. | ரூ.5,00,000/– மற்றும் அதற்கு மேல் | 12% |

**தணிக்கைக் கட்டணம் சட்டப்பிரிவு 92(2)**

| வ.எண். | ஆண்டு வருமானம் | விழுக்காடு (%) |
|---|---|---|
| 1 | ரூ.5000/–க்கு குறைவாக உள்ளவற்றிற்கு | --- |
| 2 | ரூ.5000/–க்கு மேலாக ரூ.5,00,000/–க்கு மிகாமல் உள்ளவற்றிற்கு | 1.5% |
| 3 | ரூ.5,00,000/– மற்றும் அதற்கு மேல் | 4% |

**நிருவாக கட்டமைப்பு**

8. சமய நிறுவனங்களின் நிருவாகத்தை முறைப்படுத்தவும் மற்றும் மேற்பார்வையிடவும், 1959–ஆம் ஆண்டு, தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின் கீழ், இந்து சமய அறநிலையத் துறையின் நிருவாகத் தலைவராக ஆணையர் உள்ளார்.

9. இந்து சமய அறநிலையத்துறையின் பொது நிருவாகம், பணியாளரமைப்பு, சமய நிறுவனங்களின் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் மேலாண்மை, திருப்பணி, நீதிமன்ற வழக்குகள், தணிக்கை போன்ற

பல்வேறு செயல்பாடுகளில் ஆணையருக்கு உதவியாக தலைமையிடத்தில் பல்வேறு அலுவலர்கள் பணிபுரிகின்றனர்.

## தலைமை அலுவலகத்தின் பணியாளர் அமைப்பு – துறை அலுவலர்கள்

| வ.எண் | பதவி | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கூடுதல் ஆணையர் (நிருவாகம்) – (இ.ஆ.ப.,) | 1 |
| 2. | கூடுதல் ஆணையர் (பொது) | 1 |
| 3. | கூடுதல் ஆணையர் (விசாரணை) | 1 |
| 4. | கூடுதல் ஆணையர் (திருப்பணி) | 1 |
| 5. | இணை ஆணையர் (தலைமையிடம்) | 1 |
| 6. | இணை ஆணையர் (சட்டச்சேர்மம்) | 1 |
| 7. | இணை ஆணையர் (கல்வி மற்றும் தொண்டு நிறுவனங்கள்) | 1 |
| 8. | இணை ஆணையர் (சரிபார்ப்பு–தலைமையிடம்) | 1 |

| வ.எண் | பதவி | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 9. | உதவி ஆணையர் (சட்டச்சேர்மம்) | 1 |
| 10. | உதவி ஆணையர்/ நிருவாக அலுவலர் (கிராமக்கோயில் பூசாரிகள் நலவாரியம்) | 1 |
| 11. | ஆசிரியர், திருக்கோயில் திங்களிதழ் | 1 |

தலைமையிடத்தில் பணிபுரியும் பிற துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் விவரம் பின்வருமாறு:–

**தலைமை அலுவலகத்தின் பணியாளர் அமைப்பு – மாற்றுப்பணி அலுவலர்கள்**

| வ. எண். | பதவி | பணியிடங்களின் எண்ணிக்கை | தாய்த் துறை |
|---|---|---|---|
| 1. | தலைமைப் பொறியாளர் | 1 | பொதுப்பணித்துறை / நெடுஞ்சாலைத்துறை |
| 2. | தனி அலுவலர் (திருக்கோயில் நிலங்கள்) (மாவட்ட வருவாய் அலுவலர் நிலை) | 2 | வருவாய்த்துறை |

| வ. எண். | பதவி | பணியிடங்களின் எண்ணிக்கை | தாய்த் துறை |
|---|---|---|---|
| 3. | கண்காணிப்புப் பொறியாளர் | 1 | பொதுப்பணித்துறை / நெடுஞ்சாலைத்துறை |
| 4. | செயற் பொறியாளர் | 1 | பொதுப்பணித்துறை / நெடுஞ்சாலைத்துறை |
| 5. | உதவிக் கோட்டப் பொறியாளர் | 1 | பொதுப்பணித்துறை / நெடுஞ்சாலைத்துறை |
| 6. | உதவிப் பொறியாளர்/ தொழில்நுட்ப உதவியாளர் | 1 | தமிழ்நாடு மாநில கட்டுமானக் கழகம் |
| 7. | உதவிப் பொறியாளர் (கட்டுமானம்) | 1 | பொதுப்பணித்துறை / நெடுஞ்சாலைத்துறை |
| 8. | உதவிப் பொறியாளர் (மின்சாரம்) | 1 | எரிசக்தித் துறை |
| 9. | முதுநிலை வரைதொழில் அலுவலர் | 1 | பொதுப்பணித்துறை / நெடுஞ்சாலைத்துறை |
| 10. | வரைதொழில் அலுவலர் | 2 | பொதுப்பணித்துறை / நெடுஞ்சாலைத்துறை |
| 11. | இளநிலை வரைதொழில் அலுவலர் | 2 | தமிழ்நாடு மாநில கட்டுமானக் கழகம் |

| வ. எண். | பதவி | பணியிடங்களின் எண்ணிக்கை | தாய்த் துறை |
|---|---|---|---|
| 12. | முதுநிலை கணக்கு அலுவலர் | 1 | கருவூலங்கள் மற்றும் கணக்குத்துறை |
| 13. | உதவி கணக்கு அலுவலர் | 1 | கருவூலங்கள் மற்றும் கணக்குத்துறை |
| 14. | தலைமைத் தணிக்கை அலுவலர் (அரசு துணைச் செயலாளர் நிலை) | 1 | நிதித்துறை |
| 15. | இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர் | 1 | செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை |

**மண்டல மற்றும் கோட்ட அளவிலான நிருவாகம்**

10. இந்து சமய அறநிலையத் துறையின் நிருவாகம் மாநில அளவில் 20 மண்டலங்களையும், 36 கோட்டங்களையும் உள்ளடக்கியது. ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு இணை ஆணையரும், ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஒரு உதவி ஆணையரும் நியமிக்கப்பட்டு நிருவாகம்

கண்காணிக்கப்பட்டு வருகிறது. மண்டல இணை ஆணையர்கள் மற்றும் கோட்ட உதவி ஆணையர்களின் வட்டார ஆளுகை எல்லை குறித்த விவரங்கள் பின்வருமாறு:–

## அலுவலர்களின் ஆளுகை எல்லை

| வ. எண் | மண்டலம் | கோட்டம் | ஆளுகை எல்லை |
|---|---|---|---|
| 1. | இணை ஆணையர், சென்னை –1 | 1. உதவி ஆணையர், சென்னை | சென்னை மாவட்டத்தில் திருவொற்றியூர், தண்டையார்பேட்டை, மாதவரம், பெரம்பூர், புரசைவாக்கம், எழும்பூர், அம்பத்தூர் மற்றும் அயனாவரம் ஆகிய வருவாய் வட்டங்கள் |
| 2. | இணை ஆணையர், சென்னை–2 | | சென்னை மாவட்டத்தில் மயிலாப்பூர், அமைந்தகரை, மதுரவாயல், மாம்பலம், கிண்டி, வேளச்சேரி, ஆலந்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய வருவாய் வட்டங்கள் |

| வ. எண் | மண்டலம் | கோட்டம் | ஆளுகை எல்லை |
|---|---|---|---|
| 3. | இணை ஆணையர், காஞ்சிபுரம் | 2. உதவி ஆணையர், காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் மாவட்டம் |
| | | 3. உதவி ஆணையர், செங்கல்பட்டு | செங்கல்பட்டு மாவட்டம் |
| 4. | இணை ஆணையர், வேலூர் | 4. உதவி ஆணையர், திருவள்ளூர் | திருவள்ளூர் மாவட்டம் |
| | | 5. உதவி ஆணையர், வேலூர் | வேலூர், திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்கள் |
| 5. | இணை ஆணையர், திருவண்ணா-மலை | 6. உதவி ஆணையர், திருவண்ணா-மலை | திருவண்ணாமலை மாவட்டம் |
| | | 7. உதவி ஆணையர், கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 6. | இணை ஆணையர், சேலம் | 8. உதவி ஆணையர், சேலம் | சேலம் மாவட்டம் |
| | | 9. உதவி ஆணையர், தருமபுரி | தருமபுரி மாவட்டம் |

| வ. எண் | மண்டலம் | கோட்டம் | ஆளுகை எல்லை |
|---|---|---|---|
| 7. | இணை ஆணையர், ஈரோடு | 10. உதவி ஆணையர், ஈரோடு | ஈரோடு மாவட்டம் |
| | | 11. உதவி ஆணையர், நாமக்கல் | நாமக்கல் மாவட்டம் |
| 8. | இணை ஆணையர், கோயம்புத்தூர் | 12. உதவி ஆணையர், கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் |
| 9. | இணை ஆணையர், மயிலாடுதுறை | 13. உதவி ஆணையர், மயிலாடுதுறை | மயிலாடுதுறை மாவட்டம் |
| | | 14. உதவி ஆணையர், கும்பகோணம் | தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் மற்றும் திருவிடைமருதூர் வருவாய் வட்டங்கள் |
| 10. | இணை ஆணையர், நாகப்பட்டினம் | 15. உதவி ஆணையர், நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் மாவட்டம் |
| | | 16. உதவி ஆணையர், திருவாரூர் | திருவாரூர் மாவட்டம் |
| 11. | இணை ஆணையர், தஞ்சாவூர் | 17. உதவி ஆணையர், தஞ்சாவூர் | தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவிடைமருதூர் மற்றும் கும்பகோணம் வட்டங்கள் நீங்கலாக |

| வ. எண் | மண்டலம் | கோட்டம் | ஆளுகை எல்லை |
|---|---|---|---|
| | | 18. உதவி ஆணையர், புதுக்கோட்டை | புதுக்கோட்டை மாவட்டம் |
| 12. | இணை ஆணையர், திருச்சிராப்பள்ளி | 19. உதவி ஆணையர், திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இலால்குடி மற்றும் துறையூர் வருவாய் வட்டங்கள் நீங்கலாக |
| | | 20. உதவி ஆணையர், பெரம்பலூர் | பெரம்பலூர் மாவட்டம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இலால்குடி மற்றும் துறையூர் வருவாய் வட்டங்கள் |
| 13. | இணை ஆணையர், திருப்பூர் | 21. உதவி ஆணையர், திருப்பூர் | திருப்பூர் மாவட்டம் |
| | | 22. உதவி ஆணையர், கரூர் | கரூர் மாவட்டம் |
| 14. | இணை ஆணையர், திண்டுக்கல் | 23. உதவி ஆணையர், திண்டுக்கல் | திண்டுக்கல் மாவட்டம் |
| | | 24. உதவி ஆணையர், தேனி | தேனி மாவட்டம் மற்றும் மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி மற்றும் பேரையூர் வருவாய் வட்டங்கள் |

| வ. எண் | மண்டலம் | கோட்டம் | ஆளுகை எல்லை |
|---|---|---|---|
| 15. | இணை ஆணையர், சிவகங்கை | 25. உதவி ஆணையர், பரமக்குடி | இராமநாதபுரம் மாவட்டம் |
| | | 26. உதவி ஆணையர், சிவகங்கை | சிவகங்கை மாவட்டம் |
| 16. | இணை ஆணையர், மதுரை | 27. உதவி ஆணையர், மதுரை | மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி மற்றும் பேரையூர் வருவாய் வட்டங்கள் நீங்கலாக |
| | | 28. உதவி ஆணையர், விருதுநகர் | விருதுநகர் மாவட்டம் |
| 17. | இணை ஆணையர், திருநெல்வேலி | 29. உதவி ஆணையர், திருநெல்வேலி | திருநெல்வேலி மாவட்டம் |
| | | 30. உதவி ஆணையர், நாகர்கோவில் | கன்னியாகுமரி மாவட்டம் |
| 18. | இணை ஆணையர், தூத்துக்குடி | 31. உதவி ஆணையர், தூத்துக்குடி | தூத்துக்குடி மாவட்டம் |
| | | 32. உதவி ஆணையர், தென்காசி | தென்காசி மாவட்டம் |
| 19. | இணை ஆணையர், விழுப்புரம் | 33. உதவி ஆணையர், விழுப்புரம் | விழுப்புரம் மாவட்டம் |

| வ. எண் | மண்டலம் | கோட்டம் | ஆளுகை எல்லை |
|---|---|---|---|
| | | 34. உதவி ஆணையர், கள்ளக்குறிச்சி | கள்ளக்குறிச்சி மாவட்டம் |
| 20. | இணை ஆணையர், கடலூர் | 35. உதவி ஆணையர், கடலூர் | கடலூர் மாவட்டம் |
| | | 36. உதவி ஆணையர், அரியலூர் | அரியலூர் மாவட்டம் |

## இணை ஆணையரின் பணிகள்

11. இந்து சமய அறநிலையத் துறையில் இணை ஆணையர், ஒரு மண்டல அலுவலராவார். சட்டப்பிரிவு 46–ன் கீழ் வெளியிடப்பட்ட இந்து சமய அறநிறுவனங்கள், இணை ஆணையரின் ஆளுகையின் கீழ் உள்ளன. சட்டப்பிரிவு 46(i)–ன் கீழ் வெளியிடப்பட்ட சமய நிறுவனங்களுக்கு பரம்பரை அல்லாத அறங்காவலர்களை நியமிக்கவும், சமய நிறுவனங்களின் வரவு செலவு திட்டத்தினை அங்கீகரிக்கவும் இணை ஆணையருக்கு அதிகாரமுள்ளது.

சட்டப்பிரிவு 63–ன் கீழ் மனுக்களை விசாரித்து முடிவு எடுக்கவும், சட்டப்பிரிவு 64–ன் கீழ்

எந்தவொரு சமய நிறுவனத்திற்கும் நிருவாகத்திட்டம் வகுக்கவும் இணை ஆணையருக்கு அதிகாரமுண்டு. சட்டப்பிரிவு 21A–ன் கீழ் உதவி ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை சீராய்வு செய்திட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சட்டப்பிரிவு 46(i)–ன் கீழ் பிரசுரம் செய்யப்பட்ட சமய நிறுவனங்களில் தவறிழைக்கும் அறங்காவலர்களை சட்டப்பிரிவு 53–ன் கீழ் பணியிடை நீக்கம், பணிநீக்கம் அல்லது பணியறவு செய்ய இணை ஆணையருக்கு அதிகாரம் உள்ளது.

அவருக்கு, சட்டப்பிரிவு 54–ன் கீழ் பரம்பரை அறங்காவலர் பதவியில் ஏற்படும் காலியிடங்களை நிரப்பவும் அதிகாரம் உள்ளது. சமய நிறுவனங்களுக்கு சொந்தமான நிலங்கள், கட்டடங்களில் ஏற்படும் ஆக்கிரமிப்புகளை சட்டப்பிரிவு 78–ன் கீழ் விசாரித்து வெளியேற்றுவதற்கு உத்தரவிடும் அதிகாரம் இணை ஆணையருக்கு உள்ளது. அவ்வப்போது ஆணையரால் ஒதுக்கப்படும் பிற பணிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

## உதவி ஆணையரின் பணிகள்

12. இந்து சமய அறநிலையத்துறையில் உதவி ஆணையர் ஒரு மாவட்ட நிலை அலுவலராவார். சட்டப்பிரிவு 46-ன் கீழ் வெளியிடப்படாத இந்து சமய நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் உதவி ஆணையருக்கு உள்ளது. பட்டியலைச் சேராத சமய நிறுவனங்களுக்கு வரவு செலவு திட்டம் அங்கீகாரம் மற்றும் பரம்பரை அல்லாத அறங்காவலர் நியமனம் குறித்து ஆணை பிறப்பிக்கலாம். சமய நிறுவனங்கள் தொடர்பாக புகார்கள் வரப்பெறின் அவற்றின் மீது விசாரணை மேற்கொண்டு துறையின் ஆளுகையின் கீழ் கொண்டுவர முதல் அறிக்கை உதவி ஆணையரால் அளிக்கப்படும்.

சட்டப்பிரிவு 92-ன் கீழ் சகாயத் தொகை மற்றும் தணிக்கைக் கட்டணங்களை வசூல் செய்வதற்காக சமய நிறுவனங்களை, உதவி ஆணையர் மதிப்பீடு செய்து, அதனை ஆணையருக்கு அறிக்கையாக வழங்குகிறார். மேலும், அவர் சட்டப்பிரிவுகள் 93 மற்றும் 102-ன் கீழ் சட்ட நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட செலவு தொகைகளை வசூல் செய்து தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாக

நிதிக்கணக்கில் செலுத்திடவும் செய்கிறார். ஆணையரால் அவ்வப்போது ஒதுக்கப்படும் பிற பணிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

**ஆய்வரின் பணிகள்**

13. இந்து சமய அறநிலையத்துறையில் பணிபுரியும் மண்டல இணை ஆணையர்கள் மற்றும் கோட்ட உதவி ஆணையர்கள் ஆகியோருக்கு உதவி புரிய வட்ட அளவில் 274 ஆய்வர் பணியிடங்கள், துறை சார்ந்த வழக்குகளைக் கையாள 29 வழக்கு ஆய்வர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

14. சமய நிறுவனங்கள் தொடர்பாக வரப்பெறும் புகார்கள் மீது விசாரணை மேற்கொண்டு, துறையின் ஆளுகையின் கீழ் கொண்டுவர முதல் அறிக்கையை உதவி ஆணையருக்கு அளிக்க வேண்டும். சமய நிறுவனங்களை ஆய்வர்கள் காலமுறைப்படி ஆய்வு செய்ய வேண்டும். மேலும், சகாயத் தொகை, தணிக்கைக் கட்டணம், பரிசீலனைக் கட்டணம் மற்றும் நீதிமன்றங்களால் விதிக்கப்படும் செலவு தொகைகள் ஆகியவற்றை வசூலிக்க வேண்டும்.

15. ஆய்வர்கள், அறநிறுவனங்களால் தயாரித்து அளிக்கப்பட்ட சொத்துப் பதிவேடு, திட்டப் பதிவேடு மற்றும் மரப் பதிவேடு ஆகியவற்றைப் பெற்று, அவற்றைச் சரிபார்த்து உதவி ஆணையரின் ஒப்புதலுக்கு அளிக்க வேண்டும். இத்துறை அதிகாரிகளிடமிருந்து வரப்பெறும் அனைத்து மனுக்கள் மற்றும் குறிப்புகளின் மீது விசாரணை மேற்கொண்டு அறிக்கை அளிக்கிறார்கள். அறங்காவலர்கள் நியமனத்திற்கான விண்ணப்பங்களை விசாரித்து சரிபார்த்து அறிக்கை அனுப்ப வேண்டும். ஏலம், ஒப்பந்தப்புள்ளி திறப்பு, உண்டியல் திறப்பு போன்றவற்றை கண்காணிக்க வேண்டும். துறை ஆளுகையின் கீழ் உள்ள சமய நிறுவனங்களுக்கு உதவித் தொகை நிர்ணயம் செய்வதற்காக அவற்றின் வரவு செலவு பட்டியல்களை சரிபார்த்து அறிக்கை அளிக்கிறார்கள். உயர் அதிகாரிகளால் ஒதுக்கப்படும் பிற பணிகளையும் மேற்கொள்கிறார்கள்.

### சரிபார்ப்பு அலுவலர்கள்

16. சமய நிறுவனங்களின் விலையுயர்ந்த ஆபரணங்கள் மற்றும் இதர விலையுயர்ந்த பொருட்கள் தொடர்பான அறிக்கைகளை சரிபார்த்திட

தலைமையிடத்தில் இணை ஆணையர் நிலையில் ஒரு சரிபார்ப்பு அலுவலர் உள்ளார். சமய நிறுவனங்களின் விலையுயர்ந்த ஆபரணங்கள் மற்றும் இதர விலையுயர்ந்த பொருட்களை சரிபார்த்து மதிப்பீடு அறிக்கை தயாரித்திட ஏதுவாக துணை ஆணையர் நிலையில் ஒரு சரிபார்ப்பு அலுவலரை மண்டல இணை ஆணையர் கொண்டுள்ளார். மேற்கண்ட வழிமுறையில், ஒரு தங்க, வெள்ளி மற்றும் வைர மதிப்பீட்டு நிபுணர் ஒருவரும் இளநிலை தொழில்நுட்ப உதவியாளர் ஒருவரும் அவர்களுக்கு உதவுகின்றனர். அவர்களுக்கு ஒதுக்கப்படும் சிறப்பு பணிகளுக்கும் அவர்கள் பொறுப்புடையவர்கள் ஆவர்.

**பொறியியல் பிரிவு**

17. திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகள் மற்றும் கட்டுமானப் பணிகளுக்கான மதிப்பீடுகளை கூர்ந்தாய்வு செய்தல், பணிகளை மேற்பார்வையிடல், அளவீடுகளைக் குறித்தல், குறிக்கப்பட்ட அளவீடுகளைச் சரிபார்த்தல் போன்ற பணிகளை பொறியாளர்கள் மற்றும் வரைதொழில் அலுவலர்கள் மேற்கொள்கின்றனர். இந்து சமய அறநிலையத் துறையில் கீழ்க்காணும்

226 பணியிடங்கள் கொண்ட திருக்கோயில் புனரமைப்பு மற்றும் பாதுகாத்தல் பணிக்கான பணித்தொகுதி ஏற்படுத்தப்பட்டுள்ளது:–

**புனரமைப்பு மற்றும் பாதுகாப்பு பிரிவு**

| வ.எண். | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தலைமைப் பொறியாளர் | 1 |
| 2. | கண்காணிப்புப் பொறியாளர் | 1 |
| 3. | செயற்பொறியாளர் | 8 |
| 4. | உதவி செயற்பொறியாளர் (கட்டுமானம்) | 13 |
| 5. | உதவி கோட்டப் பொறியாளர் | 9 |
| 6. | உதவி செயற்பொறியாளர் (மின்சாரம்) | 7 |
| 7. | உதவி பொறியாளர் (கட்டுமானம்) | 40 |
| 8. | உதவி பொறியாளர் (மின்சாரம்) | 13 |
| 9. | தலைமை வரைதொழில் அலுவலர் | 2 |
| 10. | வரைதொழில் அலுவலர் | 22 |
| 11. | இளநிலை வரைதொழில் அலுவலர் | 40 |

| வ.எண். | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 12. | தலைமை ஸ்தபதி (செயற்பொறியாளர் நிலையில்) | 1 |
| 13. | மண்டல ஸ்தபதி (உதவி செயற்பொறியாளர் நிலையில்) | 21 |
| 14. | உதவி ஸ்தபதி (உதவி பொறியாளர் நிலையில்) | 38 |
| 15. | தட்டச்சர் | 6 |
| 16. | ஓட்டுநர் | 2 |
| 17. | அலுவலக உதவியாளர் | 2 |
| | கூடுதல் | **226** |

**திருக்கோயில் நிருவாகம்**

18. ஒவ்வொரு சமய அறநிறுவனங்களும் அதன் நிருவாக அடிப்படையில் தனித்தன்மை கொண்டதாக விளங்குவதோடு அறங்காவலர்களால் நிருவகிக்கப்பட்டு அதற்கான பணியாளர்களை அவர்களே நியமித்துக் கொள்ளும் அதிகாரத்தைப் பெற்றுள்ளனர். எனினும், இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள்

சட்டப்பிரிவு 45(1)–ன்படி செயல் அலுவலரை நியமிக்கும் அதிகாரம் ஆணையருக்கு உள்ளது.

**செயல் அலுவலர்கள்**

19. திருக்கோயில்களின் வருமானம், அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள், அவற்றின் முக்கியத்துவம், பணிச்சுமை மற்றும் இதர பணிகளைக் கருத்திற்கொண்டு திருக்கோயில்களின் நிருவாகத்தைச் செம்மையுடன் நிருவகிக்க செயல் அலுவலர் பணியிடங்கள் பல்வேறு நிலைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:–

**செயல் அலுவலர்கள் வகைப்பாடு**

| வ.எண். | செயல் அலுவலர் நிலை | பணியிடங்கள் |
|---|---|---|
| 1. | இணை ஆணையர் | 11 |
| 2. | துணை ஆணையர் | 9 |
| 3. | உதவி ஆணையர் | 27 |
| 4. | செயல் அலுவலர்– நிலை 1 | 66 |
| 5. | செயல் அலுவலர்– நிலை 2 | 111 |
| 6. | செயல் அலுவலர்– நிலை 3 | 250 |
| 7. | செயல் அலுவலர்– நிலை 4 | 154 |
| | கூடுதல் | **628** |

**கணக்குகளும் தணிக்கையும்**

20. இணை ஆணையர் நிலை செயல் அலுவலர்கள் உள்ள கீழ்க்காணும் 8 பெரிய திருக்கோயில்களில் அவர்களுக்கு உதவியாக மண்டலத் தணிக்கை அலுவலர்கள் நிலையில் முதுநிலை கணக்கு அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்:–

1. அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு
2. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி
3. அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்
4. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்
5. அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி
6. அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை
7. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்
8. அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம்

## திருக்கோயில்களில் பொறியியல் பிரிவு

21. முக்கிய திருக்கோயில்களில் பழுதுபார்த்தல், புதுப்பித்தல், சீரமைத்தல் மற்றும் புதிய கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கென பொறியாளர்கள் உள்ளனர்.

## திருமடங்கள்

22. இந்து சமய அறநிலையத்துறையின் மேற்பார்வையில் 56 திருமடங்கள் உள்ளன. இந்தத் திருமடங்களில் சைவ நெறியை வளர்க்கும் பணியில் மதுரை ஆதீனம் என்றழைக்கப்படும் திருஞானசம்பந்தர் சுவாமிகள் மடம், திருவாவடுதுறை ஆதீனம், தருமபுரம் ஆதீனம், குன்றக்குடி ஆதீனம், பேரூர் ஆதீனம் போன்றவையும் வைணவ நெறியை வளர்க்கும் பணியில் அகோபில மடம், வானமாமலை மடம் போன்றவையும், சக்தி பீட வழிபாட்டு நெறியை வளர்க்கும் பணியில் காஞ்சிபுரம் சங்கர மடமும் தொன்றுதொட்டு தொண்டாற்றி வருகின்றன.

23. இறை வழிபாட்டுக்குரிய புகழ்மிக்கதொரு மொழியாக தமிழ் மொழியினை மேம்படுத்தியதில் மடங்களின் பங்களிப்பு மதிப்பிட முடியாததாகும்.

இளைய தலைமுறைகள் சங்க இலக்கியத்தைப் படித்து இன்புறுவதற்கு ஏதுவாக திருமடங்கள் தமிழ் ஓலைச் சுவடிகளை தளரா ஊக்கத்துடன் பாதுகாத்து வந்துள்ளனர்.

## அரசு ஆலோசகர்களாக மடாதிபதிகளின் முக்கியத்துவம்

24. ஒரு புதிய மன்னர் அரியணை ஏறும்போது, மரபு வழிவந்த குரு அல்லது ஆசான் அந்த மன்னருக்குரிய செங்கோலை தமது கரங்களால் எடுத்து வழங்குவது ஓர் அரசு சடங்காகும். இதனை பின்பற்றி ஓதுவார்கள், தேவாரத்திலிருந்து கோளறு பதிகம் பாடல்களைப் பாடும்போது அதில் பதினோராவது பாடலின் கடைசி வரியான "அடியார்கள் வானில் அரசாள்வார் ஆணை நமதே" என்ற பாடல் அடிகளைப் பாடி முடிக்கும்போது, திருவாவடுதுறை ஆதீனத்தின் தம்பிரான் சுவாமிகள் தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளிச் செங்கோலை பண்டித ஜவஹர்லால் நேருவிடம் கொடுத்தார். இந்நிகழ்வு இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் மௌண்ட் பேட்டன் பிரபுவிடமிருந்து, விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் பிரதமருக்கு அதிகாரமாற்றம் செய்யப்பட்டதை சிறப்பித்ததாய் அமைந்தது.

## இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கை

25. இந்து சமய அறநிறுவனங்களின் வரவு செலவு கணக்குகளை தணிக்கை செய்திட ஆணையரின் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டின் கீழ் தலைமைத் தணிக்கை அலுவலர் தலைமையில் தணிக்கைப்பிரிவு இயங்கி வருகிறது. தமிழகம் முழுவதுமுள்ள சமய நிறுவனங்களின் தணிக்கையினை மேற்கொள்ள தணிக்கைப் பிரிவானது 19 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு அவற்றுள் 4 மண்டலங்களின் தலைமைப் பொறுப்பு துணை தலைமைத் தணிக்கை அலுவலர்களால் ஏற்கப்பட்டுள்ளது. 15 மண்டலங்களின் தலைமைப் பொறுப்பு மண்டல தணிக்கை அலுவலர்களால் ஏற்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு உதவியாக 27 உதவி தணிக்கை அலுவலர்கள் உள்ளனர். இதனைத் தவிர்த்து ஒரு மண்டலத் தணிக்கை அலுவலரும் (நடமாடும் தணிக்கைக் குழு), ஒரு உதவி தணிக்கை அலுவலரும் தலைமையிடத்தில் பணிபுரிந்து வருகின்றனர்.

26. தணிக்கைத் தடைகளை தீர்வு செய்திட, மூன்று அடுக்கு தணிக்கைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு: –

### I. முதல் நிலை தணிக்கைக் குழு (இணை ஆணையர் / செயல் அலுவலர் நிலை திருக்கோயில்கள்)

| | | |
|---|---|---|
| 1. | ஆணையர் | தலைவர் |
| 2. | இணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை | உறுப்பினர் |
| 3. | தலைமை தணிக்கை அலுவலர் | உறுப்பினர் – செயலர் |

### II. இரண்டாம் நிலை தணிக்கைக் குழு (துணை ஆணையர் / செயல் அலுவலர் நிலை திருக்கோயில்கள்)

| | | |
|---|---|---|
| 1. | கூடுதல் ஆணையர் | தலைவர் |
| 2. | இணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை | உறுப்பினர் |
| 3. | தலைமை தணிக்கை அலுவலர் | உறுப்பினர் – செயலர் |

## III. மூன்றாம் நிலை தணிக்கைக் குழு (உதவி ஆணையர் / செயல் அலுவலர் நிலை திருக்கோயில்கள்)

| | | |
|---|---|---|
| 1. | மண்டல இணை ஆணையர் | தலைவர் |
| 2. | துணை தலைமை தணிக்கை அலுவலர் / மண்டல தணிக்கை அலுவலர் | உறுப்பினர் – செயலர் |

**ஆலோசனைக் குழு**

27. 1959–ஆம் ஆண்டு, தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தில் இந்து சமய நிறுவனங்கள் தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்க ஆலோசனைக் குழு அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இக்குழு, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைத்** தலைவராகவும், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்டுள்ளது. இக்குழு அலுவல்சார் மற்றும் அலுவல்சாரா உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு செயலாளர் அலுவல்சார் உறுப்பினராகவும், இந்து சமய

அறநிலையத்துறை ஆணையர் அலுவல்சார் உறுப்பினர் – செயலராகவும் இருந்து வருகின்றனர்.

**மாவட்ட குழு அமைத்தல்**

28. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின் கீழ் ஒவ்வொரு வருவாய் மாவட்ட எல்லைக்குட்பட்ட இந்து சமய அறநிறுவனங்களுக்கு பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர்கள் நியமனம் செய்ய தகுதியுள்ளோர் பட்டியல் தயாரிக்க மூன்றுக்கு குறையாத ஐந்துக்கு மிகாத அலுவல்சாரா உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட குழு அரசால் அமைக்கப்படும். சட்டவிதிகளின்படி, சமய நிறுவனங்களுக்கான பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர்களை நியமனம் செய்வதற்காக தகுதி வாய்ந்தோரின் பெயர்கள் அடங்கிய ஒரு பட்டியலை இக்குழு தயாரிக்கும். மாவட்ட குழுவின் உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாகும்.

**அறங்காவலர்கள் நியமனம்**

29. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின் கீழ் இந்து சமய அறநிறுவனங்களை

நிருவகிக்க பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். இவ்வாறு அமைக்கப்படும் ஒவ்வொரு அறங்காவலர் குழுவிலும் மூன்று அறங்காவலர்களுக்கு குறையாமலும் ஐந்து அறங்காவலர்களுக்கு மிகாமலும் உறுப்பினர்கள் இடம்பெற வேண்டும். இக்குழுவில் பட்டியல் இனத்தவர் அல்லது பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த உறுப்பினர் ஒருவரும், பெண் உறுப்பினர் ஒருவரும் இடம்பெற வேண்டும். இக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் இரண்டாண்டுகள் ஆகும்.

**அறங்காவலர் நியமனத் தகுதிகள்**

30. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு 25A–ன் கீழ் இந்து சமய அறநிறுவனங்களில் அறங்காவலராக நியமனம் செய்யப்படுவதற்கு கீழ்க்காணும் தகுதி வரையறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன:–

அ. கடவுள் நம்பிக்கை உடையவராக இருத்தல் வேண்டும்;

ஆ. நன்னடத்தை மற்றும் நற்பெயர் கொண்டவராக இருத்தல் வேண்டும். மேலும் சமய நிறுவனம் அமைந்துள்ள பகுதியில் மரியாதைக்குரியவராக இருத்தல் வேண்டும்;

இ. திருக்கோயில் அறங்காவலர் பணியினைச் செய்வதற்கு தேவையான நேரத்தையும் ஆர்வத்தையும் பெற்றிருப்பவராக இருத்தல் வேண்டும்.

**அறங்காவலர்களை நியமிப்பதற்கான அதிகாரம்**

31. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு 49(1)–ன்படி, ரூ.10,000/–க்கும் குறைவாக ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய அறநிறுவனங்களுக்கு, மாவட்ட குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில் மூன்று பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர் குழுவை அமைத்திட உதவி ஆணையர் அதிகாரம் பெற்றவர் ஆவார்.

32. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு 46(i)–ன் கீழ் உள்ள, ரூ.10,000/–க்கு குறையாமல் ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல் ஆண்டு வருமானம் வரப்பெறும் இந்து சமய அறநிறுவனங்களுக்கு, மாவட்ட குழுக்களின்

பரிந்துரையின் அடிப்படையில் மூன்று பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர் குழுவை அமைத்திட இணை ஆணையர் அதிகாரம் பெற்றவர் ஆவார்.

33. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு 46(ii)–ன் கீழ் உள்ள, ரூ.2 இலட்சத்திற்கு குறையாமல் ரூ.10 இலட்சத்திற்கு மிகாமல் ஆண்டு வருமானம் வரப்பெறும் இந்து சமய அறநிறுவனங்களுக்கு, மாவட்ட குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில் மூன்று பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர் குழுவை அமைத்திட ஆணையர் அதிகாரம் பெற்றவர் ஆவார்.

34. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு 46(iii)–ன் கீழ் உள்ள, ரூ.10 இலட்சம் மற்றும் அதற்கு மேல் ஆண்டு வருமானம் வரப்பெறும் இந்து சமய அறநிறுவனங்களுக்கு ஐந்து பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர்கள் கொண்ட அறங்காவலர் குழுவை அமைத்திடும் அதிகாரம் அரசிடம் உள்ளது.

35. ஆணையர், இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் அவர்களால் நியமிக்கப்பட்ட நபர்களுக்கும் கூடுதலாக தேவைப்படின் இரண்டு

நபர்களை அறங்காவலர் குழுவின் உறுப்பினர்களாக அரசு நியமிக்கலாம்.

**தக்கார் நியமனம்**

36. அறங்காவலர் குழுவின் பதவிக்காலம் முடிந்த பின்னர் அல்லது தற்காலிகமாக காலியிடம் ஏற்படும்பொழுது அரசு, ஆணையர், இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் அதிகாரவரம்பிற்குட்பட்டு அடுத்த அறங்காவலர் குழு நியமனம் செய்யப்படும் வரை, திருக்கோயிலின் அறங்காவலருக்குரிய கடமைகளை செய்திட இடைக்கால ஏற்பாடாக தகுதியான ஒருவர் தக்காராக நியமனம் செய்யப்படுவார்.

## II - இந்து சமய அறநிறுவனங்களின் அசையாச் சொத்துக்களின் நிருவாகம்

**நில விவரங்கள்**

37. இந்து சமய மற்றும் அறநிறுவனங்களுக்கு சொந்தமாக பெருமளவில் வேளாண் நிலங்கள், மனைகள் மற்றும் கட்டடங்கள் உள்ளன. இந்து சமய அறநிலையத்துறைக்கும் வருவாய் துறைக்கும் இடையே, நில ஆவணங்களின் ஒத்திசைவுப் பணி

தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒத்திசைவில் ஏதேனும் மாற்றங்கள் செய்ய வேண்டின் எதிர்காலத்தில் அவை மேற்கொள்ளப்பட்டு சரிசெய்யப்படும். நாளதுவரை நிலங்கள் குறித்த விவரங்கள் பின்வருமாறு:–

**திருக்கோயில் நிலங்களின் வகைப்பாடு மற்றும் அளவு**

| **நிலத்தின் வகைப்பாடு** | **திருக்கோயில் நிலங்கள் (இலட்சம் ஏக்கரில்)** | **திருமடம் நிலங்கள் (இலட்சம் ஏக்கரில்)** | **மொத்த அளவிலான நிலங்கள் (இலட்சம் ஏக்கரில்)** |
|---|---|---|---|
| நன்செய் | 1.83 | 0.21 | 2.04 |
| புன்செய் | 2.18 | 0.35 | 2.53 |
| மானாவாரி | 0.21 | – | 0.21 |
| **கூடுதல்** | **4.22** | **0.56** | **4.78** |

38. இந்து சமய அறநிறுவனங்களுக்கு சொந்தமான 22,600 கட்டடங்களும் 33,665 காலி மனைகளும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. விவசாய நிலங்கள் 1,23,729 நபர்களுக்கு

குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. இந்த அரசு அமைந்த பிறகு 07.05.2021 முதல் 15.08.2021 வரையிலான காலத்தில் திருக்கோயில்களுக்கு சொந்தமான மேற்கண்ட அசையா சொத்துக்களிலிருந்து, 44.03 கோடி ரூபாய் அளவிலான குத்தகை வருமானம் ஈட்டப்பெற்றுள்ளது.

**நியாய வாடகை நிர்ணயம்**

39. 1959–ஆம் ஆண்டு, இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின் பிரிவு 34(A)–ன்படி, இந்து சமய அறநிறுவனங்களுக்கு சொந்தமான கட்டடங்கள் மற்றும் காலி மனைகளுக்கு நியாய வாடகை நிர்ணயம் செய்வதற்காக வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க, வணிக மற்றும் குடியிருப்புத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் கட்டடங்கள் மற்றும் மனைகளுக்கான நியாய வாடகை நிர்ணயம் செய்யும் பொருட்டு மண்டல இணை ஆணையர், செயல் அலுவலர் அல்லது அறங்காவலர் அல்லது அறங்காவலர் குழுத்தலைவர் மற்றும் பதிவுத்துறையின் மாவட்டப் பதிவாளர் ஆகியோர் அடங்கிய குழு ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

**வருவாய் நீதிமன்றங்கள்**

40. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, திருவாரூர், கடலூர், மதுரை, இலால்குடி, மன்னார்குடி, நாகப்பட்டினம் மற்றும் திருநெல்வேலி ஆகிய 10 இடங்களில் வருவாய் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. கும்பகோணம், சேலம் மற்றும் தென்காசி ஆகிய இடங்களில் முகாம் வருவாய் நீதிமன்றங்களும் இயங்கி வருகின்றன.

41. இந்து சமய அறநிறுவனங்களுக்கு சொந்தமான விவசாய நிலங்களுக்கு வரவேண்டிய குத்தகை நிலுவைத் தொகைகளை வசூல் செய்யவும், விவசாய நிலங்களுக்கு குத்தகைத் தொகை நிர்ணயிக்கவும், குத்தகை செலுத்த மறுக்கும் குத்தகைதாரர்களை வெளியேற்றவும், 1961–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது பொறுப்புரிமை (வேளாண்மை நிலங்களின் ஒழுங்கு முறை) சட்டத்தின் கீழ், [Tamil Nadu Public Trusts (Regulation and Administration of Agricultural Lands)] இந்து சமய அறநிறுவனங்களால் தனி துணை ஆட்சியர் தலைமையிலான வருவாய் நீதிமன்றங்களில் வழக்கு பதிவு செய்யப்பட்டு அவை தீர்வு செய்யப்படுகின்றன.

42. வருவாய் நீதிமன்றங்களின் முன்பாக தற்போது நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை மொத்தம் 7914 ஆகும். 15.08.2021 வரையில் 601 வழக்குகள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. துறையால் 477 புதிய வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. 362.94 இலட்சம் ரூபாய் அளவிற்கு குத்தகை நிலுவைத் தொகை வசூலிக்க உத்தரவு பெறப்பட்டு, 3.75 இலட்சம் ரூபாய் அளவிற்கு வசூல் செய்யப்பட்டுள்ளது.

**நிலங்களை மீட்டல்**

43. இந்து சமய அறநிறுவனங்களுக்கு சொந்தமான நிலங்கள் நில உடைமை பதிவு மேம்பாட்டுத் திட்ட (Updating Registry Scheme) செயலாக்கத்தின்போது தனிப்பட்ட நபர்களின் பெயரில் தவறாக பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையை மாற்றி, மீண்டும் அந்தந்த திருக்கோயில்களின் பெயரிலேயே பட்டா பெறுவதற்காக மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இரண்டு மாவட்ட வருவாய் அலுவலர்கள் தனி அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

44. இந்த அரசு அமைந்த பிறகு, தனியார் பெயரில் தவறுதலாக பட்டா மாற்றம் செய்யப்பட்ட 60 திருக்கோயில்களுக்கு சொந்தமான 301.44 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் 07.05.2021 முதல் 15.08.2021 வரையிலான காலகட்டத்தில் திருக்கோயில் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டு, மீண்டும் சம்பந்தப்பட்ட திருக்கோயில்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மூன்று திருக்கோயில்களுக்கு சொந்தமான 11.12 ஏக்கர் பரப்பளவை உள்ளடக்கிய நிலங்களின் பதிவுகள் கணினியில் பதிவேற்றப்பட்டுள்ள சிட்டாக்களோடு ஒத்திசைவு செய்யப்பட்டுள்ளன.

**ஓய்வுபெற்ற துணை ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள் மற்றும் நில அளவையர்கள் நியமனம்**

45. இந்து சமய அறநிறுவனங்களின் மிகப்பெரும் நிலவளங்களைச் சிறப்பாக நிருவகித்திடவும், தனியார் பெயரில் தவறாக பட்டா மாற்றம் செய்யப்பட்ட நிலங்களைக் கண்டறிந்து மீட்டு எடுக்கவும், வருவாய்த் துறையுடன் ஒருங்கிணைந்து பணியாற்றவும் தொகுப்பூதிய அடிப்படையில், 8 ஓய்வுபெற்ற துணை ஆட்சியர்கள், 20 ஓய்வுபெற்ற

வட்டாட்சியர்கள், 17 ஓய்வுபெற்ற நில அளவையர்கள், 3 ஓய்வுபெற்ற வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் 9 ஓய்வுபெற்ற கிராம நிர்வாக அலுவலர்கள் ஆகியோர் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்**

46. இந்த அரசு அமைந்த பிறகு, 203.00 ஏக்கர் அளவிலான வேளாண் நிலங்களும் 170.2105 கிரவுண்டு அளவிலான காலி மனைகளும் 1.811 கிரவுண்டு பரப்பிலான கட்டடங்களும் மற்றும் 15.597 கிரவுண்டு அளவிலான திருக்கோயில் குளக்கரை பகுதிகளும் மீட்டெடுக்கப்பட்டு, அந்தந்தத் திருக்கோயில்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட சொத்துக்களின் மதிப்பு 641.01 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

**கூட்டு ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துதல்**

47. கூட்டாக திருக்கோயில்களின் நிலங்களை ஆக்கிரமித்து, அவ்விடங்களை தங்கள் குடியிருப்பு பகுதிகளாக மாற்றிக்கொண்டு, நீண்ட காலமாக தொடந்து வசித்து வருபவர்களை திருக்கோயில் வாடகைதாரர்களாக ஏற்றுக்கொள்ள பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## III – திருப்பணி

### திருப்பணி (புதுப்பித்தல் மற்றும் பாதுகாத்தல்)

48. திருக்கோயில்கள் மற்றும் கட்டடங்களின் கட்டுமானம், பழுதுபார்த்தல், பாதுகாத்தல், பேணிக்காத்தல், மீட்டெடுத்தல் மற்றும் புதுப்பித்தல் உள்ளிட்ட பணிகள் திருப்பணியில் அடங்குவனவாகும். வரலாற்றுச் சிறப்பும் தொன்மையும் கொண்டு ஆழ்வார்களாலும் நாயன்மார்களாலும் போற்றிப் பாடப்பட்ட திருக்கோயில்கள் மற்றும் கிராமப்புறங்களில் அமைந்துள்ள திருக்கோயில்கள் உள்ளிட்டவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

### திருப்பணி மற்றும் கட்டுமானப் பணிகளுக்கான நிதி ஆதாரங்கள்

49. பின்வரும் பல்வேறு நிதி ஆதாரங்களிலிருந்து திருக்கோயில் பாதுகாத்தல், பேணிக்காத்தல், மீட்டெடுத்தல் (திருப்பணிகள்) பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன:–

- அரசு மானியம்
- இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாக நிதி

- பொது நல நிதி
- ஆலய மேம்பாட்டு நிதி
- பிற திருக்கோயில்களின் உபரி நிதி மாற்றம்
- கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி
- திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி
- நன்கொடைகள்
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்கள் திருப்பணி நிதி
- சுற்றுலாத்துறை நிதி

**அரசு மானியம்**

50. அரசு மானியமாக ஆண்டுதோறும் வரலாற்று சிறப்புமிக்க, கலைநயம் வாய்ந்த திருக்கோயில்களின் திருப்பணிக்கென (பாதுகாத்தல், மரபு மாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) ரூ.6.00 கோடி வழங்கப்பட்டு வருகிறது.

**இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாக நிதி**

51. சட்டப்பிரிவு 92(1) மற்றும் 92(2)–ன்படி சகாயத்தொகை மற்றும் தணிக்கைக் கட்டணம் ஆகியன திருக்கோயில்களிலிருந்து வசூலிக்கப்பட்டு, இத்துறையின் சரக உதவி ஆணையர்கள் மூலம் அரசு கணக்கில் செலுத்தப்பட்டு இந்நிதியில் வரவு

வைக்கப்படுகிறது. சட்டப்பிரிவு 96(2)–ன்படி இத்துறையின் நிருவாகச் செலவு, ஓய்வூதியப் பங்களிப்பு உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் இந்நிதியில் பற்று வைக்கப்படுகிறது.

இத்துறையால் இந்நிதியின் பரிவர்த்தனைகள் ஒத்திசைவு செய்யப்பட்டு சென்னையில் உள்ள மாநில கணக்காயரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. திருக்கோயிலின் புனரைமைப்புக்காக ஆணையர் கோரும் தொகை அரசால் நிதிமாற்றம் செய்யப்படுகிறது.

**பொது நல நிதி**

52. நிதிப்பற்றாக்குறையுள்ள அல்லது நிதிநிலையில் நலிவடைந்துள்ள திருக்கோயில்களின் புனரைமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக, சமய நிறுவனங்களின் உபரி நிதி அல்லது தானாக முன்வந்து அளிக்கும் தனியர்களின் நன்கொடைகள் மூலம் சட்டப்பிரிவு 97–ன்டி **"பொது நல நிதி"** உருவாக்கப்பட்டுள்ளது.

**ஆலய மேம்பாட்டு நிதி**

53. நிதி வசதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதிவசதியற்ற

திருக்கோயில்களின் மேம்பாட்டிற்காக ரூ.8.00 கோடி பெற்று மூலதன நிதி ஏற்படுத்தப்பட்டது. இம்மூலதன நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து தொன்மை மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

## பிற திருக்கோயில்களின் உபரி நிதிமாற்றம்

54. நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதிவசதியற்ற திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்ள, சட்டப்பிரிவு 36–ன் கீழ் நிதிமாற்றம் மூலமாக நிதியுதவி வழங்கப்படுகிறது.

## கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி

55. இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள சிறு கிராமப்புறத் திருக்கோயில்களின் புனரமைப்பு பணிகளுக்கு நிதியுதவி வழங்கிட "கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணி நிதி" ஏற்படுத்தப்பட்டுள்ளது. பழநி, "அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி" திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ரூ.2.00 கோடி நிதிமாற்றம் செய்து மூலதன நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி

56. "முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி" 1991–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் ஐந்தாம் நாள் உருவாக்கப்பட்டது. இந்நிதிக்கு தொண்டுள்ளம் கொண்டோர், தொழிலதிபர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் பெறப்பட்டன. "திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி" என்று தற்போது அழைக்கப்படும் இந்நிதியில் தற்போது ரூ.8.89 கோடி உள்ளது. இந்நிதி அரசால் நேரடியாக நிருவகிக்கப்பட்டு வருகிறது.

## நன்கொடைகள்

57. பக்தர்கள் தாமே முன்வந்து தமது சொந்த செலவில், துறை மேற்பார்வையில், திருக்கோயில்களின் திருப்பணிகளான பாதுகாத்தல், புனரமைத்தல் மற்றும் புத்தாக்கம் ஆகிய பணிகளை மேற்கொள்வது பொதுவானதொரு நடைமுறையாக இருந்து வருகிறது. மேலும், நன்கொடை வழங்குவோர் இணையம் வாயிலாக எளிதில் நன்கொடை அளிக்க வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்கள் திருப்பணி நிதி**

58. இந்து சமய அறநிலையத்துறை ஆளுகையில் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள சிறு திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்திட திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.1,00,000/– வீதம் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த உதவியானது நிதிவசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

**சுற்றுலாத்துறை நிதி**

59. தமிழகத் திருக்கோயில்கள் பெரும் சுற்றுலா ஈர்ப்பு தலங்களாகத் திகழ்கின்றன. திருக்கோயில்களுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட பக்தர்களின் நலன் கருதி கழிப்பறைகள், குளியலறைகள், குடிநீர்வசதி, தங்கும் கூடங்கள், தகவல் மையங்கள், அணுகு சாலைகள், உயர்கோபுர மின்விளக்குகள், பொருட்கள் பாதுகாப்பு அறைகள் மற்றும் வாகன நிறுத்துமிடங்கள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க

சுற்றுலாத்துறையும் இந்து சமய அறநிலையத் துறையும் இணைந்து செயல்படுகின்றன.

**பழைமை வாய்ந்த திருக்கோயில்களைப் பாதுகாத்தல், பழைமை மாறாது புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கத் திருப்பணி**

60. பழைமை வாய்ந்த திருக்கோயில்களில் அவற்றின் பழைமை மாறாது புனரமைத்தல், புதுப்பித்தல், பேணிக்காத்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகிய பணிகளை துறையில் உள்ளோர் மேற்கொள்வதற்கு ஒரு விரிவான "**பாதுகாப்பு கையேடு**" தயாரிக்கும் பணியில் இத்துறை ஈடுபட்டு வருகிறது.

61. இந்து சமய அறநிலையத்துறை, திருப்பணி மேற்கொள்ள தொன்மை மற்றும் பாரம்பரியத்தை பாதுகாத்தல் மற்றும் புனரமைத்தல் பணிகளில் நிபுணத்துவம் வாய்ந்த 22–க்கு மேற்பட்ட நிபுணர்களை முறையாக கலந்து ஆலோசித்து வருகிறது. அத்துடன் இத்திருக்கோயில்களின் மேம்பாட்டிற்கு, அறிவியல் சார்ந்த நிபுணத்துவத்துடன் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிபுணர்களின் கருத்தின் அடிப்படையில்

திருப்பணிக்கான கருத்துருக்கள் உருவாக்கப்பட்டு, அவை அரசால் உருவாக்கப்பட்ட மண்டல மற்றும் மாநில அளவிலான பரிசீலனைக் குழுவின் முன் வைக்கப்படுகின்றன. 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொன்மை வாய்ந்த திருக்கோயில்களுக்கான கருத்துருக்கள் நிபுணர் குழுவின் முன் வைக்கப்பட்டு அதன் அறிவுரையின்படி மேற்கொள்ளப்படுகின்றன.

**வரைபடக் குழு**

62. மாமல்லபுரத்தில் உள்ள அரசு கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை கல்லூரியின் முதல்வர் வரைபடக் குழுவின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார். மாமல்லபுரத்தில் உள்ள அரசு கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை கல்லூரியில் உள்ள ஒரு நிபுணத்துவம் வாய்ந்த பேராசிரியர்/ உதவி பேராசிரியர், இந்து சமய அறநிலையத்துறையின் மண்டல ஸ்தபதி மற்றும் ஒருங்கிணைப்பாளராக கூடுதல் ஆணையர் (திருப்பணி) ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாவர். திருக்கோயில்களின் உட்பகுதியில் ஏற்படுத்தவுள்ள புதிய கட்டமைப்புகள் மற்றும் புதிய திருத்தேர் குறித்த

வரைபடங்களை கூர்ந்தாய்வு செய்து மேலோப்பம் செய்யும் பணியையும் இக்குழு மேற்கொள்கிறது.

**சுவரோவியங்களை புதுப்பித்தல் மற்றும் பாதுகாத்தல்**

63. திருக்கோயில்களின் பழைமையான சுவரோவியங்களை பழைமை மாறாது புதுப்பித்தல், பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் பணிகளை மேற்கொள்ள ஆலோசனை மற்றும் மேற்பார்வைக் குழு ஒன்று அரசால் அமைக்கப்பட்டது.

**திருக்குளங்களை சீரமைத்தல் மற்றும் மழைநீர் சேகரித்தல்**

64. மாநிலம் முழுவதும் 1586 திருக்கோயில்களில் 2359 திருக்குளங்கள் உள்ளன. இத்திருக்குளங்கள் கீழ்க்கண்ட முறைகளில் பழுதுபார்த்து மற்றும் மறுசீரமைக்கப்படுகிறது.

- திருக்குளங்களில் உள்ள உட்புறம் மற்றும் சுற்றுப்புறத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.
- திருக்குளங்களைச் சுற்றி சுற்றுச்சுவர் அமைத்தல்.
- தூர் எடுத்தல் மற்றும் ஆழப்படுத்துதல்.
- திருக்குளங்களில் உள்ள படிகளைச் சீரமைத்தல்.
- திருக்குளங்களுக்கு மழை நீர் வருவதற்கும் உபரி நீர் வெளியேறுவதற்கும் வழி ஏற்படுத்துதல்.

**பட்டயப் பொறியாளர்களைப் பட்டியலிடுதல்**

65. திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்வதற்கான மதிப்பீடுகள் தயாரிப்பதில் தாமதம் ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு, பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைகளில் பணியாற்றி ஓய்வுபெற்ற பொறியாளர்கள் பட்டயப் பொறியாளர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். இப்பொறியாளர்களால் திருப்பணிக்கான மற்றும் கட்டுமானப் பணிகளுக்கான, வரைபடங்கள் மற்றும் தேவையான மதிப்பீடுகள் ஆகியவை தயாரிக்கப்படுகின்றன.

**ஸ்தபதிகளைப் பட்டியலிடுதல்**

66. சிற்ப சாஸ்திர மற்றும் ஆகம சாஸ்திர விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளபடி, திருக்கோயில்களில் திருப்பணிகள் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில், தம் முன்னோர் மூலம் வழிவழியாக இக்கலையை நன்கு கற்றறிந்தோர்களையும், சிற்ப சாஸ்திரக்கலையில் போதிய கல்வியறிவு பெற்றுள்ளோர்களையும் ஸ்தபதி/சிற்பிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

## குடமுழுக்கு (கும்பாபிஷேகம் / சம்ப்ரோக்ஷணம்)

67. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆகம விதிப்படி ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் குடமுழுக்கு நடத்தப்பட வேண்டும். இதனடிப்படையில் திருக்கோயில்கள் கீழ்க்காணுமாறு வகைப்படுத்தப்பட்டு திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்தப்படுகின்றன:–

- ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற மற்றும் நாயன்மார்களால் பாடல்பெற்ற பழைமை வாய்ந்த திருக்கோயில்கள்.
- வரலாற்று சிறப்புமிக்க மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள்.
- பிரார்த்தனை முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள்.
- கிராமப்புறங்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்கள்.

## மரத்திருத்தேர்

68. ஆண்டுதோறும் திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களில் தேரோட்டம் என்பது மிகவும் முக்கியத்துவம் பெற்ற விழாவாகும். திருவாரூரில் அமைந்துள்ள அருள்மிகு தியாகராஜ

சுவாமி திருக்கோயிலின் ஆழித்தேர் ஆசியாவிலேயே மிகப்பெரும் தேராக விளங்கி வருகிறது. தேர்த் திருவிழாவின் போது தனது பக்தர்களுக்கு ஆசி வழங்குவதற்காக இறைவனே திருக்கோயில் வெளியே உலா வருவதாக கருதப்படுகிறது. 809 திருக்கோயில்களில் 989 மரத் திருத்தேர்கள் உள்ளன.

**தங்கரதம் மற்றும் வெள்ளிரதம் உள்ள திருக்கோயில்கள்**

69. திருக்கோயில்களில் பக்தர்கள் தங்களது வேண்டுதலை நிறைவேற்ற உற்சவமூர்த்தியை தங்கரதத்திலோ, வெள்ளிரதத்திலோ எழுந்தருளச் செய்து ரதம் இழுப்பது நீண்டகால வழக்கத்தில் உள்ளது.

தற்போது 65 திருக்கோயில்களில் தங்கரதமும், 49 திருக்கோயில்களில் வெள்ளிரதமும் உள்ளன.

**தங்கரதம் உள்ள திருக்கோயில்கள்**

| வ.எண். | திருக்கோயில் பெயர் |
|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி. |
| 2. | அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருக்கோயில், பூங்காநகர், சென்னை. |

| வ.எண். | திருக்கோயில் பெயர் |
|---|---|
| 3. | அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயில், வடபழநி, சென்னை. |
| 4. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி. |
| 5. | அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு. |
| 6. | அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை. |
| 7. | அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன் கோயில். |
| 8. | அருள்மிகு விநாயகர் திருக்கோயில், ஈச்சநாரி, கோயம்புத்தூர். |
| 9. | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம். |
| 10. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை. |
| 11. | அருள்மிகு சங்கர நாராயணசுவாமி திருக்கோயில், சங்கரன்கோவில். |
| 12. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர். |
| 13. | அருள்மிகு வானமாமலைப் பெருமாள் திருக்கோயில், நாங்குநேரி (சப்பரம்). |
| 14. | அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம். |

| வ.எண். | திருக்கோயில் பெயர் |
|---|---|
| 15. | அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில், இரத்தினகிரி. |
| 16. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை. |
| 17. | அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர். |
| 18. | அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு. |
| 19. | அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம். |
| 20. | அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், சிறுவாச்சூர். |
| 21. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை. |
| 22. | அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி. |
| 23. | அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை. |
| 24. | அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில், திருவான்மியூர், சென்னை. |
| 25. | அருள்மிகு வேலாயுதசுவாமி திருக்கோயில், திண்டல்மலை, ஈரோடு. |
| 26. | அருள்மிகு அனந்தபத்மநாபசுவாமி திருக்கோயில், அடையாறு, சென்னை. |

| வ.எண். | திருக்கோயில் பெயர் |
|---|---|
| 27. | அருள்மிகு கருநெல்லிநாதசுவாமி திருக்கோயில், திருத்தங்கல், சிவகாசி. |
| 28. | அருள்மிகு முண்டகக்கண்ணியம்மன் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை. |
| 29. | அருள்மிகு வேங்கடாஜலபதி திருக்கோயில், ஒப்பிலியப்பன்கோயில், கும்பகோணம். |
| 30. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம். |
| 31. | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், கரூர். |
| 32. | அருள்மிகு தண்டுமாரியம்மன் திருக்கோயில், கோயம்புத்தூர். |
| 33. | அருள்மிகு சந்திரசூடேஸ்வரர் திருக்கோயில், ஓசூர். |
| 34. | அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல். |
| 35. | அருள்மிகு ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில், நாமக்கல். |
| 36. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், பச்சைமலை, கோபிசெட்டிபாளையம். |
| 37. | அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயில், அரியாக்குறிச்சி. |
| 38. | அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதியம்மன் திருக்கோயில், திருநெல்வேலி. |
| 39. | அருள்மிகு கண்ணுடைய நாயகியம்மன் திருக்கோயில், நாட்டரசன்கோட்டை, சிவகங்கை. |

| வ.எண். | திருக்கோயில் பெயர் |
|---|---|
| 40. | அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு, நாமக்கல். |
| 41. | அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில், உறையூர், திருச்சிராப்பள்ளி. |
| 42. | அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில், சேலம். |
| 43. | அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், சேலம். |
| 44. | அருள்மிகு முருகன் திருக்கோயில், சோலைமலை மண்டபம், அழகர்கோயில், மதுரை. |
| 45. | அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில், சோளிங்கர், இராணிப்பேட்டை. |
| 46. | அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர், சென்னை. |
| 47. | அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், திண்டுக்கல். |
| 48. | அருள்மிகு அங்காளபரமேஸ்வரி திருக்கோயில், மேல்மலையனூர், விழுப்புரம். |
| 49. | அருள்மிகு கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயில், பாரியூர், ஈரோடு. |
| 50. | அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில், திருப்போரூர், காஞ்சிபுரம். |
| 51. | அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை, கோயம்புத்தூர். |

| வ.எண். | திருக்கோயில் பெயர் |
|---|---|
| 52. | அருள்மிகு திருமலைக்குமாரசுவாமி திருக்கோயில், பண்பொழி, திருநெல்வேலி. |
| 53. | அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 54. | அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் மற்றும் பத்ரகாளியம்மன் திருக்கோயில், மடப்புரம், சிவகங்கை. |
| 55. | அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் திருக்கோயில், பேளூர், சேலம். |
| 56. | அருள்மிகு பாலதண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், சுக்கிரவாரபேட்டை, கோயம்புத்தூர். |
| 57. | அருள்மிகு விஸ்வநாதசுவாமி திருக்கோயில், சிவகாசி, விருதுநகர். |
| 58. | அருள்மிகு ஆமருவிப்பெருமாள் திருக்கோயில், தேரழுந்தூர், நாகப்பட்டினம். |
| 59. | அருள்மிகு பூங்கா முருகன் திருக்கோயில், தல்லாக்குளம், மதுரை. |
| 60. | அருள்மிகு வாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், விருதுநகர். |
| 61. | அருள்மிகு சண்முகநாத சுவாமி திருக்கோயில், குன்றக்குடி (கேடகம் / சப்பரம்). |
| 62. | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், திருவப்பூர், புதுக்கோட்டை. |
| 63. | அருள்மிகு சௌந்தரராஜப்பெருமாள் திருக்கோயில், நாகப்பட்டினம். |

| வ.எண். | திருக்கோயில் பெயர் |
|---|---|
| 64. | அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயில், மண்டைக்காடு, கன்னியாகுமரி. |
| 65. | அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில், கல்விடங்கம், சங்ககிரி வட்டம், சேலம். |

## வெள்ளிரதம் உள்ள திருக்கோயில்கள்

| வ. எண். | திருக்கோயில் பெயர் |
|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி. |
| 2. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர். |
| 3. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை. |
| 4. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி. |
| 5. | அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம். |
| 6. | அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை. |
| 7. | அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை. |
| 8. | அருள்மிகு ஆதிகும்பேஸ்வரர் திருக்கோயில், கும்பகோணம். |

| வ. எண். | திருக்கோயில் பெயர் |
|---|---|
| 9. | அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில், திருப்பாதிரிப்புலியூர். |
| 10. | அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன்கோயில். |
| 11. | அருள்மிகு சட்டநாதசுவாமி திருக்கோயில், சீர்காழி. |
| 12. | அருள்மிகு மயூரநாதசுவாமி திருக்கோயில், மயிலாடுதுறை. |
| 13. | அருள்மிகு மாரியம்மன், அங்காளம்மன் திருக்கோயில், பொள்ளாச்சி. |
| 14. | அருள்மிகு பிரசன்ன விநாயகர் திருக்கோயில், உடுமலைப்பேட்டை. |
| 15. | அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு. |
| 16. | அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில், மணவாளநல்லூர். |
| 17. | அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம். |
| 18. | அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம். |
| 19. | அருள்மிகு முத்துகுமாரசுவாமி திருக்கோயில், பூங்காநகர், சென்னை. |
| 20. | அருள்மிகு திருவேங்கடமுடையான் திருக்கோயில், அரியக்குடி. |
| 21. | அருள்மிகு சண்முகநாத சுவாமி திருக்கோயில், குன்றக்குடி. |

| வ. எண். | திருக்கோயில் பெயர் |
|---|---|
| 22. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், கீழச்சேவல்பட்டி. |
| 23. | அருள்மிகு கண்ணுடைய நாயகியம்மன் திருக்கோயில், நாட்டரசன்கோட்டை. |
| 24. | அருள்மிகு கொப்புடைய நாயகியம்மன் திருக்கோயில், காரைக்குடி. |
| 25. | அருள்மிகு நகரசிவன் என்ற மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், தேவகோட்டை. |
| 26. | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், கொன்னையூர், திருமயம். |
| 27. | அருள்மிகு ஆருத்ர கபாலீஸ்வரர் திருக்கோயில், ஈரோடு. |
| 28. | அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயில், பவானி. |
| 29. | அருள்மிகு பழநியாண்டவர் திருக்கோயில், பவானி. |
| 30. | அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், ஆய்க்குடி, திருநெல்வேலி. |
| 31. | அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், தொட்டியம், திருச்சிராப்பள்ளி. |
| 32. | அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், நெய்வேலி. |
| 33. | அருள்மிகு வெயிலுக்கு உகந்த விநாயகர் திருக்கோயில், உப்பூர், இராமநாதபுரம். |
| 34. | அருள்மிகு சௌந்தரராஜ பெருமாள் திருக்கோயில், திண்டுக்கல். |

| வ. எண். | திருக்கோயில் பெயர் |
|---|---|
| 35. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், குமரக்கோட்டம், காஞ்சிபுரம். |
| 36. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், எட்டுக்குடி, நாகப்பட்டினம். |
| 37. | அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் மற்றும் தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், செட்டிக்குளம், பெரம்பலூர். |
| 38. | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், காரைக்குடி, சிவகங்கை. |
| 39. | அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், தங்கசாலை, சென்னை. |
| 40. | அருள்மிகு கச்சபேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம். |
| 41. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், விராலிமலை, புதுக்கோட்டை. |
| 42. | அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில், திருவத்திபுரம், திருவண்ணாமலை. |
| 43. | அருள்மிகு சேவுகப் பெருமாள் திருக்கோயில், சிங்கம்புணரி, சிவகங்கை. |
| 44. | அருள்மிகு செல்லியம்மன் திருக்கோயில், பாலாற்றங்கரை, வேலூர். |
| 45. | அருள்மிகு நவநீதேஸ்வரர் திருக்கோயில், சிக்கல், நாகப்பட்டினம். |
| 46. | அருள்மிகு காளிகாம்பாள் கமடேஸ்வரர் திருக்கோயில், சென்னை. |

| வ. எண். | திருக்கோயில் பெயர் |
|---|---|
| 47. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சைதாப்பேட்டை, சென்னை. |
| 48. | அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயில், திருகோகர்ணம், புதுக்கோட்டை. |
| 49. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், கோயில்கந்தன்குடி, திருவாரூர். |

## IV – சிறப்புத் திட்டங்கள்

### அனைத்து சாதியினருக்கும் அர்ச்சகர் பணி நியமனம்

70. வழிபாடு செய்பவர் அனைவரும் இறைவனைத் துதிக்கவும், சடங்குகள் செய்யவும், போற்றி வழிபடவும், திருக்கோயில்களில் சமூக நீதியை நிலைநாட்டும் விதத்தில், இந்து சமயத்தின் அனைத்து பிரிவுகளிலிருந்தும் தகுதியான மற்றும் தேவையான பயிற்சி பெற்றோரை அர்ச்சகர்களாக நியமித்திட அரசு உத்தரவிட்டுள்ளது. இதன் அடிப்படையில், மதுரை, பழநி, திருச்செந்தூர், திருவண்ணாமலை ஆகிய நான்கு இடங்களில் 'சைவ அர்ச்சகர்ளுக்கான' பயிற்சி நிலையங்களும், சென்னை, ஸ்ரீரங்கம் ஆகிய இரண்டு இடங்களில் 'வைணவ அர்ச்சகர்' பயிற்சி நிலையங்களும்

ஏற்படுத்தப்பட்டு மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

71. **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் 14.08.2021 அன்று 56 அர்ச்சகர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். அவர்களுள் 22 அர்ச்சகர்கள் மேற்கூறிய பயிற்சி நிலையங்களில் பயிற்சியினை நிறைவு செய்தவர்கள் ஆவர்.

**'கலைஞர் தலமரக்கன்றுகள்' நடும் திட்டம்**

72. தொன்றுதொட்டு மரங்கள் இறைவன் / இறைவியை குறிக்கும் சின்னங்களாகவும், பல்வேறு பூஜைகளின் அங்கமாக விளங்குகின்றன. ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ஒரு குறிப்பிட்ட மரம் புனிதமாக தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களை நினைவுகூறும் வகையில் திருக்கோயில்களில் ஒரு இலட்சம் தலமரக்கன்றுகளை மாநிலம் முழுவதும் உள்ள திருக்கோயில் வளாகத்தில் நடும் "**கலைஞர் தலமரக்கன்றுகள் நடும் திட்டம்**" 07.08.2021 அன்று **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களால் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலக

வளாகத்தில் நாகலிங்க மரக்கன்றினை நட்டு துவக்கி வைக்கப்பட்டது.

**'அன்னைத் தமிழில் அர்ச்சனை'**

73. தமிழ் அருளாளர்கள் இறைவனை தமிழில் போற்றி பாடியுள்ளனர். அருளாளர்கள் அருளிய திருமந்திரம், தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்யபிரபந்தம், திருப்புகழ் போன்றவை தமிழ் மொழியின் சிறப்பினை எடுத்துரைத்தது மட்டுமல்லாமல் தமிழின் வளர்ச்சிக்கும், தங்களது பங்களிப்பை அளித்துள்ளன.

74. **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள், **'அன்னைத் தமிழில் அர்ச்சனை'** செய்யப்படும் என்ற அறிவிப்பு பதாகையினை வெளியிட்டார். இத்திட்டம் முதற்கட்டமாக 47 முதுநிலை திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு பதாகையில், தமிழில் அர்ச்சனை செய்யும் அர்ச்சகர்களின் பெயர் மற்றும் அவரது தொடர்பு எண் உள்ளிட்ட விவரங்கள் இடம்பெற்றுள்ளன.

75. தமிழ் அர்ச்சனை நூல்கள் கிடைக்கச் செய்து இவ்வரசு **'அன்னைத் தமிழில் அர்ச்சனை'** திட்டத்திற்கு மேலும் வலுசேர்த்துள்ளது. 'அருள்மிகு விநாயகர் போற்றி', 'அருள்மிகு முருகவேள் போற்றி', 'அருள்மிகு உமையம்மை போற்றி', 'அருள்மிகு நடராசர் போற்றி', 'அருள்மிகு தென்முக கடவுள் போற்றி', 'அருள்மிகு கோதண்டராமர் போற்றி', 'அருள்மிகு தாயார் போற்றி', 'அருள்மிகு துர்க்கையம்மன் போற்றி', 'அருள்மிகு காளியம்மன் போற்றி', 'அருள்மிகு மாரியம்மன் போற்றி', 'அருள்மிகு அனுமன் போற்றி' ஆகிய **108 போற்றிகள்** அடங்கிய நூல்களும், **1008 போற்றிகள்** அடங்கிய 'அருள்மிகு சிவன் போற்றி' நூலும், ஆக 12 போற்றி நூல்களும் திருக்கோயில்கள் அனைத்திலும் கிடைக்கச் செய்யும் திட்டத்தை, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** 12.08.2021 அன்று தொடங்கி வைத்தார். மேலும் இரண்டு போற்றி நூல்களான **'அருள்மிகு திருமால் போற்றி'** மற்றும் **'அருள்மிகு நவகோள்கள் போற்றி'** ஆகியனவும் வெளியிடப்பட்டுள்ளன.

**'அன்னதான திட்டம்'**

76. இறையருள் பெற திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு உணவளிப்பதே அன்னதானத் திட்டம் ஆகும். இத்திட்டம் 2002–ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டு, மதியவேளை உணவு 754 திருக்கோயில்களில் வழங்கப்பட்டு வருகிறது. ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் மற்றும் பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

**'போக்' சான்றளித்தல் – (BHOG Certification)**

77. திருக்கோயில்களில் தயாரிக்கப்படும் பிரசாதம் மற்றும் அன்னதானம் தரத்துடனும், சுகாதாரமான முறையிலும் தயாரிக்கப்படுவதை உறுதி செய்திட இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரப்படுத்தல் ஆணையத்தால் வழங்கப்படும் தரச்சான்று அனைத்து முதுநிலை திருக்கோயில்களிலும் பெறப்பட்டுள்ளது. இதுவரை 45 திருக்கோயில்கள் இச்சான்றினைப் பெற்றுள்ளன. இதர திருக்கோயில்களுக்கு சான்று பெற நடவடிக்கையில் உள்ளது.

## நோய் பெருந்தொற்று காலத்தில் ஏழைகளுக்கு உணவு வழங்குதல்

78. முந்தைய காலகட்டங்களிலும் இதுபோன்ற பேரிடர் காலங்களில் திருக்கோயில்கள் மூலம் ஏழைகளுக்கு உணவளிக்கும் நடைமுறை இருந்து வந்துள்ளது. இதனைப் பின்பற்றி கொரோனா நோய்த்தொற்று பெரும்பரவல் காலத்தில், ஏழை எளிய மக்களின் பசியினை போக்கும் விதமாக திருக்கோயில்கள் சார்பாக, 44 இலட்சம் பேருக்கு 12.05.2021 முதல் 21.06.2021 வரை உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## ஆன்மிகம் மற்றும் ஒழுக்கநெறி வகுப்புகள்

79. பண்டைய தமிழ் இலக்கியங்களில் உள்ள நற்பண்புகள், நீதிநெறி கருத்துக்களை கதைகள் வாயிலாக குழந்தைகளின் மனதில் ஆழப்பதிந்திட, ஆன்மிக மற்றும் நீதிநெறி வகுப்புகள், முக்கிய திருக்கோயில்கள் அனைத்திலும் நடத்தப்பட்டு வருகின்றன.

## சிறப்பு வழிபாடும் பொது விருந்தும்

80. ஆண்டுதோறும் முக்கியத் திருக்கோயில்களில் சுதந்திரத் திருநாள், பேரறிஞர் அண்ணா நினைவு நாள் ஆகிய தினங்களில் அனைத்துச் சமுதாய மக்களுக்கும் சிறப்பு உணவு வழங்கப்பட்டு வருகிறது. நோய்த்தொற்று பெரும்பரவல் காரணமாக இவ்வாண்டு, சுதந்திரத் திருநாள் அன்று (15.08.2021) 404 திருக்கோயில்களில் இனிப்புடன் கூடிய உணவு பொட்டலங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

## யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம்

81. 2020–2021–ஆம் ஆண்டு தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில் அருகில், பவானி ஆற்றங்கரையில் நடத்தப்பட்ட யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமில் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களைச் சேர்ந்த 24 யானைகளும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த திருக்கோயில்களின் 2 யானைகளும் பங்கேற்று பயனடைந்துள்ளன. இந்த முகாம் 48 தினங்கள் நடைபெற்றது.

**மின்கல சிற்றுந்துகள்**

82. திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் நலனுக்காக பதினொன்று திருக்கோயில்களில் 21 மின்கல சிற்றுந்துகள் பயன்பாட்டில் உள்ளன.

**மின்கல சிற்றுந்துகள் உள்ள திருக்கோயில்கள்**

| வ. எண். | திருக்கோயில் பெயர் | மின்கல சிற்றுந்துகள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம் | 3 |
| 2. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி | 3 |
| 3. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் | 3 |
| 4. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி | 1 |
| 5. | அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர் | 1 |
| 6. | அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை | 1 |
| 7. | அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர் | 1 |

| வ. எண். | திருக்கோயில் பெயர் | மின்கல சிற்றுந்துகள் எண்ணிக்கை |
|---|---|---|
| 8. | அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல் | 1 |
| 9. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை | 2 |
| 10. | அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம் | 3 |
| 11. | அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர் | 2 |
| | **கூடுதல்** | **21** |

**கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்களுக்கான அரசு மானியம்**

83. கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்கள் நிருவாகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 490 திருக்கோயில்கள், ஒரு மகளிர் கல்லூரி, ஒரு மேல்நிலைப்பள்ளி மற்றும் 2 உயர்நிலைப்பள்ளிகள் ஆகியவற்றை நிருவகிக்க ஆண்டு ஒன்றுக்கு 3 கோடி ரூபாய் அரசு மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

## புதுக்கோட்டை தேவஸ்தான திருக்கோயில்களுக்கான அரசு மானியம்

84. புதுக்கோட்டை தேவஸ்தான திருக்கோயில்களின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள 225 திருக்கோயில்களை நிருவகித்திட, ஆண்டு ஒன்றுக்கு 1.00 கோடி ரூபாய் அரசு மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

## ஒரு கால பூஜை திட்டம்

85. இத்திட்டம், நிதி வசதியற்று, ஒரு கால பூஜை கூடச் செய்திட இயலாத நிலையில் இருந்து வந்துள்ள திருக்கோயில்களுக்கு, நாள்தோறும் ஒரு கால பூஜை செய்திட 1986–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதற்கென 12,959 திருக்கோயில்களுக்கு, ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ரூ.1 இலட்சம் மூலதன நிதி ஒன்று உருவாக்கப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து ஒரு கால பூஜை நடத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் மூலதன நிதியினை இரட்டிப்பாக்கி ரூ.2 இலட்சமாக உயர்த்தியும், அதற்காக நடப்பாண்டில் ரூ.130 கோடி அரசு மானியமும் வழங்கப்படும்.

## V – பக்தர்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகள்

### தங்கும் விடுதிகள்

86. பக்தர்களின் வசதிக்காக ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், ஆலங்குடி அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில் மற்றும் காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் 'தங்கும் விடுதிகள்' கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### பக்தர்களுக்கு உயர்தர விபூதி மற்றும் குங்குமம் வழங்குதல்

87. பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் தனித்துவத்துடன் கூடிய அபிஷேக விபூதி தயாரிக்கப்பட்டு வருகிறது. மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், பண்ணாரி

அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் மற்றும் திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், ஆகிய திருக்கோயில்களில் நவீன இயந்திரங்கள் மூலம் தரமான குங்குமம் தயாரித்து பக்தர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**மானசரோவர் மற்றும் முக்திநாத் புனிதப் பயணம்**

88. இந்து மதத்தை சேர்ந்த ஒவ்வொருவரும் தமது வாழ்நாளில் ஒருமுறையேனும் மானசரோவருக்கும் முக்திநாத்துக்கும் ஒரு புனித யாத்திரை செல்ல வேண்டும் என்ற நம்பிக்கை உடையவராக உள்ளனர். அதனடிப்படையில், அத்தகையவரின் விருப்பத்தை நிறைவு செய்ய, தமிழ்நாட்டிலிருந்து சீனாவில் உள்ள மானசரோவர் சென்று 'புனித யாத்திரை' முடித்துவரும் 500 இந்து யாத்ரீகர்களுக்கு, ஆண்டுதோறும், தலா ஒருவருக்கு 40,000 ரூபாய் வழங்கப்படுகிறது. அதுபோன்றே, தமிழ்நாட்டிலிருந்து நேபாளத்திலுள்ள முக்திநாத் சென்று 'புனித யாத்திரை' முடித்துவரும் 500 இந்து யாத்ரீகர்களுக்கு, ஆண்டுதோறும்,

தலா ஒருவருக்கு 10,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இவ்விரு நல்கைகளும் அவர்களது புனிதப் பயணங்கள் நிறைவடைந்த பின்னரே வழங்கப்படுகின்றன.

**சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்குதல்**

89. முதியோர், ஆதரவற்றோர் மற்றும் விதவைத் தாய்மார்களுக்கு, சுதந்திர நாளன்றும், பேரறிஞர் அண்ணா நினைவு நாளன்றும், முக்கியத் திருக்கோயில்களில் காணிக்கையாகப் பெறப்படும் பருத்தி சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கப்படுகின்றன. இவ்வாண்டில் சுதந்திரத் திருநாளான ஆகஸ்ட் 15–ஆம் நாளன்று 11,526 பருத்தி சேலைகளும் வேட்டிகளும் வழங்கப்பட்டன.

**திருக்கோயில்களில் நூல்நிலையங்கள்**

90. திருக்கோயில்களுக்கு வருகைபுரியும் பக்தர்களுக்கு ஆன்மிக உணர்வை ஊட்டிட 114 திருக்கோயில்களில், இறையுணர்வு தொடர்பான ஆன்மிக நூல்களும் (Devotional Books) இதழ்களும் நிறைந்த நூலகங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

## VI – திருக்கோயில்களில் தூய்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு

**உழவாரப் பணி (திருக்கோயில் பகுதிகளைத் தூய்மைப்படுத்தும் பணி)**

91. திருக்கோயில்களில், கடந்த பல்லாண்டுகளாக உழவாரப்பணிகளை மேற்கொள்ள ஆர்வமுள்ள தன்னார்வலர் குழுக்கள் மூலமாக திருக்கோயில்களை தூய்மைப்படுத்தும் இப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணி "உழவாரப்பணி" என அழைக்கப்படுகிறது. இதனை எளிமைப்படுத்தும் வகையில், முதற்கட்டமாக 47 முதுநிலைத் திருக்கோயில்களில் உழவாரப் பணிகள் செய்வதற்கு இணையவழி முறையில் பதிவு செய்து கொள்ளும் புதிய வசதி 27.07.2021 அன்று தொடங்கப்பட்டுள்ளது.

**திருக்கோயில் வளாகத்தில் நெகிழி (Plastic) பயன்பாட்டினைத் தடை செய்தல்**

92. திருக்கோயில்களில் ஆரோக்கியமும் தூய்மையும் மிக்க சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் திருக்கோயில் வளாகம் மற்றும் சுற்றுப்புறங்களில் நெகிழிப் பயன்பாடு தடை

செய்யப்பட்டுள்ளது. திருக்கோயில்களில் நெகிழிப் பொருட்களுக்கு மாற்றாக துணிப்பைகள், காகிதப்பைகள், மூங்கில் தட்டுகள், பாக்குமட்டை தட்டுகள் ஆகியவற்றின் பயன்பாடு ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது.

## VII - பாதுகாப்பு நடவடிக்கைகள்

### திருக்கோயில்கள் பாதுகாப்பு

93. திருக்கோயில் வளாகங்களில் மின்னணு பாதுகாப்பு உபகரணங்களான கள்வர் எச்சரிக்கை மணி, 'மெட்டல் டிடெக்டர்' (Metal Detector), நவீன ஒளிப்பதிவுக் கருவி (டிஜிட்டல் வீடியோ), கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் உறுதியான கம்பித் தடுப்புக் கதவுகள்(Grill Gates) போன்றவை பொருத்தப்பட்டுள்ளன. திருக்கோயில்களில் இரவு / பகல் காவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

### உலோகத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்தவைகள் பாதுகாப்பு

94. திருக்கோயில்களுக்கு சொந்தமான உலோகத் திருமேனிகளையும் அணிகலன்களையும் விலையுயர்ந்த பொருள்களையும் பாதுகாத்திட,

உலோகத் திருமேனி பாதுகாப்பு மையங்கள், பாதுகாப்பு அறைகள் உருவாக்கப்பட்டு, களவு எச்சரிக்கை மணி பொருத்துதல், தொட்டிப் பூட்டு அமைப்பு ஏற்படுத்துதல், இரும்பு வாயிற்கதவுகள் பொருத்துதல், கண்காணிப்பு ஒளிப்படக் கருவிகள் பொருத்துதல் இத்தகைய பணிகளுடன், பகல்/இரவுக் காவலர்கள் நியமனம், திருக்கோயில் பாதுகாப்புப் படையினர் நியமனம் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், சிலைகள் / உலோக திருமேனிகளை பதிவு செய்து ஆவணப்படுத்தும் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

95. பாதுகாப்பு வசதிகள் குறைவாக உள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான விலை மதிப்பற்ற உலோகத் திருமேனிகளைப் பாதுகாக்கும் பொருட்டு 34 உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் கட்டப்பட்டுள்ளன. திருவிழாக் காலங்களில் அவற்றை எடுத்துச் சென்று விழா முடிந்ததும் மீண்டும் இம்மையத்தில் ஒப்படைப்பு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு மையத்தில் உள்ள அனைத்து உலோகத் திருமேனிகளுக்கும் பூஜைகள் செய்யப்படுகின்றன. இவற்றில் 23 மையங்களில்

8693 உலோகத் திருமேனிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இந்த பாதுகாப்பு மையத்தில் CCTV, கள்வர் எச்சரிக்கை மணி மற்றும் ஆயுதம் தாங்கிய காவலர்கள் உள்ளிட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## பாதுகாப்பு மையம்

| | |
|---|---|
| 1. | திருவாரூர் சிலைகள் பாதுகாப்பு மையம் (அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் வளாகம்). |
| 2. | அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி. |
| 3. | அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோயில், திருநெல்வேலி. |
| 4. | அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில், சேலம். |
| 5. | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், காந்திநகர், வேலூர். |
| 6. | அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை. |
| 7. | அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம். |
| 8. | அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில், திருப்பாதிரிபுலியூர், கடலூர். |
| 9. | அருள்மிகு நாகேஸ்வரசுவாமி திருக்கோயில், கும்பகோணம். |
| 10. | அருள்மிகு பட்டீஸ்வரசுவாமி திருக்கோயில், பேரூர், கோயம்புத்தூர். |

| | |
|---|---|
| 11. | அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயில், திருக்கோகர்ணம், புதுக்கோட்டை. |
| 12. | அருள்மிகு திருவாப்புடையார் திருக்கோயில், செல்லூர், மதுரை. |
| 13. | அருள்மிகு சுந்தரராஜப்பெருமாள் திருக்கோயில், சிவகங்கை. |
| 14. | அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர் (கூடுதல் மையம்). |
| 15. | அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர். |
| 16. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி. |
| 17. | அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், அதியமான் கோட்டை, தருமபுரி. |
| 18. | அருள்மிகு ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில், விழுப்புரம். |
| 19. | அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர். |
| 20. | அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு மலைக்காவலர் திருக்கோயில், திருச்செங்கோடு, நாமக்கல். |
| 21. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை, திருப்பூர். |
| 22. | அருள்மிகு சோழீஸ்வரர் பிரசன்ன வெங்கடரமணசுவாமி திருக்கோயில், பெருந்துறை, ஈரோடு. |
| 23. | அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில், வீரபாண்டி, தேனி. |

96. மேலும், உலோகத் திருமேனிகளை பாதுகாக்கும் பொருட்டு கீழ்க்காணும் 11 உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மைய கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு அவற்றை செயல்பாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன:–

| | |
|---|---|
| 1. | அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம், தஞ்சாவூர். |
| 2. | அருள்மிகு மதனகோபாலசுவாமி மற்றும் பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில், பெரம்பலூர். |
| 3. | அருள்மிகு நாகராஜா திருக்கோயில், நாகர்கோவில், கன்னியாகுமரி. |
| 4. | இணை ஆணையர் அலுவலக வளாகம், இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர். |
| 5. | அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், தான்தோன்றிமலை, கரூர். |
| 6. | அருள்மிகு ஆலந்துறையார் (ம) கோதண்டராமசுவாமி திருக்கோயில், அரியலூர். |
| 7. | அருள்மிகு காயாரோகணசுவாமி உடனுறை நீலாயதாட்சியம்மன் திருக்கோயில், நாகப்பட்டினம். |
| 8. | அருள்மிகு சீனிவாசப்பெருமாள் திருக்கோயில், திண்டுக்கல். |

| | |
|---|---|
| 9. | திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு வெங்கடாஜலபதி திருக்கோயில், கிருஷ்ணாபுரம், பாளையங்கோட்டை. |
| 10. | அருள்மிகு பரிமளரெங்கநாதர் திருக்கோயில், திருஇந்தளூர், மயிலாடுதுறை |
| 11. | அருள்மிகு கபர்தீஸ்வரர் திருக்கோயில், திருவலஞ்சுழி, கும்பகோணம் |

**பாதுகாப்பு அறைகள்**

97. இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் உள்ள திருக்கோயில்களில் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பிற்காக களவு எச்சரிக்கை மணி மற்றும் கண்காணிப்பு கேமராவுடன் கூடிய உயர் பாதுகாப்பு அறைகள் கட்டும் பணிக்கு இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாக நிதியிலிருந்து ரூ.308.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. முதற்கட்டமாக தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், பந்தநல்லூர் அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயிலில், ரூ.22.57 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் பாதுகாப்பு அறை ஒன்று கட்டப்பட்டுள்ளது. அதேபோன்று

இதர திருக்கோயில்களிலும் பாதுகாப்பு அறை கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**களவு எச்சரிக்கை மணி பொருத்தும் திட்டம்**

98. களவு எச்சரிக்கை மணி பொருத்தும் திட்டத்தின்கீழ், ரூ.5 கோடி மூலதனநிதி தேவைப்படும் திருக்கோயில்களுக்கு நிதியுதவி வழங்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**திருக்கோயில் பாதுகாப்புப் படை**

99. திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள், ஆபரணங்கள், உண்டியல்கள் மற்றும் விலை உயர்ந்த பொருட்கள் ஆகியவற்றின் பாதுகாப்புக்காக "**திருக்கோயில் பாதுகாப்புப்படை**" என்ற ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இதில் 1000 இரண்டாம் நிலைக் காவலர்கள், 3000 முன்னாள் இராணுவத்தினர் ஆகியோரை நியமனம் செய்வதற்கு அரசு அனுமதி அளித்தது. திருக்கோயில் பாதுகாப்புப் படையில் உள்ள முன்னாள் இராணுவத்தினருக்கு அளிக்கப்பட்டு வந்த மாத தொகுப்பூதியத்தை ரூ.1,500/–லிருந்து ரூ.5,000/–ஆக அரசு உயர்த்தியுள்ளது.

## திருக்கோயில்களில் தீத்தடுப்பு நடவடிக்கைகள்

100. திருக்கோயில்களில் தீ விபத்து தடுப்பு மற்றும் இதர பேரிடர்களைத் தவிர்க்க எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து முதற்கட்டமாக 47 முதுநிலைத் திருக்கோயில்களில் தீயணைப்புத்துறையின் உதவியுடன் தீத்தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன. அதன்படி தீயணைப்புக் கருவிகள், மணல்/தண்ணீர் வாளிகள், மின்தடைக் கருவிகள், நீர்தும்பிகள் முதலிய தீத்தடுப்பு சாதனங்கள் பொருத்தப்பட்டன. திருக்கோயில் பணியாளர்களுக்கு தேவையான தீத்தடுப்புப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

# VIII – கல்வி மற்றும் அறப்பணிகள்

## கல்வி நிறுவனங்கள்

101. பொது கல்வியோடு, ஆன்மிக நெறிகளையும், பண்பாடு மற்றும் சமயக் கோட்பாடுகளையும் இளமையிலிருந்தே பயிற்றுவிக்கும் நோக்கோடு பின்வரும் பள்ளிகளையும், கல்லூரிகளையும்,

பாடசாலைகளையும் திருக்கோயில் நிருவாகங்கள் நடத்தி வருகின்றன:–

## கல்வி நிறுவனங்களின் வகைப்பாடு

| வ.எண். | கல்வி நிறுவனங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கலை, பண்பாடு மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 5 |
| 2. | பல்தொழில்நுட்பக் கல்லூரி | 1 |
| 3. | மேல்நிலைப் பள்ளிகள் | 12 |
| 4. | உயர்நிலைப் பள்ளிகள் | 6 |
| 5. | நடுநிலைப் பள்ளிகள் | 2 |
| 6. | தொடக்கப் பள்ளிகள் | 8 |
| 7. | மெட்ரிகுலேஷன் பள்ளி | 2 |
| 8. | சி.பி.எஸ்.இ. பள்ளி | 1 |
| 9. | நாதஸ்வரம் மற்றும் தவில் இசைப் பயிற்சி பள்ளிகள் | 2 |
| 10. | அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள் | 6 |
| 11. | வேத ஆகம பாட சாலைகள் | 3 |
| 12. | ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள் | 2 |
| 13. | தேவாரப் பயிற்சிப் பள்ளிகள் | 2 |
| 14. | காது கேளாதோர் – பேச இயலாதோர் பள்ளி | 1 |
| | **கூடுதல்** | **53** |

## கல்வி நிறுவனங்களின் பட்டியல்

## கலை, பண்பாடு மற்றும் அறிவியல் கல்லூரிகள்

| | |
|---|---|
| 1. | அருள்மிகு பழநியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, பழநி, திண்டுக்கல். |
| 2. | அருள்மிகு பழநியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, பழநி, திண்டுக்கல். |
| 3. | ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம், திருநெல்வேலி. |
| 4. | ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரி, குழித்துறை, கன்னியாகுமரி. |
| 5. | பூம்புகார் கல்லூரி, மேலையூர், நாகப்பட்டினம். |

## பல்தொழில்நுட்பக் கல்லூரி

| |
|---|
| அருள்மிகு பழநியாண்டவர் பல்தொழில்நுட்பக் கல்லூரி, பழநி, திண்டுக்கல். |

## மேல்நிலைப் பள்ளிகள்

| | |
|---|---|
| 1. | அருள்மிகு பெரியநாயகியம்மன் மகளிர் மேல்நிலைப்பள்ளி, கோவிலூர், முத்துப்பேட்டை, திருவாரூர். |
| 2. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மேல்நிலைப்பள்ளி, மருதமலை, வடவள்ளி, கோயம்புத்தூர். |
| 3. | அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் மேல்நிலைப்பள்ளி, அய்யம்பாளையம், சாமளாபுரம், சோமனூர், திருப்பூர். |

| | |
|---|---|
| 4. | அருள்மிகு பேரூர் சாந்தலிங்க அடிகளார் மேல்நிலைப்பள்ளி, பேரூர், கோயம்புத்தூர். |
| 5. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மதுரை. |
| 6. | அருள்மிகு ஆண்டவர் சுப்பிரமணியசுவாமி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருப்பரங்குன்றம், மதுரை. |
| 7. | அருள்மிகு திருமலை குமாரசுவாமி தேவஸ்தான பெண்கள் மேல்நிலைப்பள்ளி, குற்றாலம், தென்காசி. |
| 8. | தேவஸ்தான பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மண்டைக்காடு, கன்னியாகுமரி. |
| 9. | ஸ்ரீ காந்திமதி அம்பாள் மகளிர் மேல்நிலைப்பள்ளி, திருநெல்வேலி. |
| 10. | அருள்மிகு ஸ்ரீ பர்வதவர்தினி அம்பாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இராமேஸ்வரம், இராமநாதபுரம். |
| 11. | அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம். |
| 12. | ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் மேல்நிலைப்பள்ளி, மயிலம், திண்டிவனம், விழுப்புரம். |

## உயர்நிலைப் பள்ளிகள்

| | |
|---|---|
| 1. | அருள்மிகு அஞ்சுவட்டத்தம்மன் மகளிர் உயர்நிலைப்பள்ளி, கீழ்வேளூர், திருவாரூர். |
| 2. | அருள்மிகு கலியுகவரதராஜப்பெருமாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, கல்லங்குறிச்சி, அரியலூர். |

| | |
|---|---|
| 3. | அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம். |
| 4. | அருள்மிகு சுந்தரராஜா உயர்நிலைப்பள்ளி, அழகர்கோயில், மதுரை. |
| 5. | தேவஸ்வம் உயர்நிலைப்பள்ளி, திற்பரப்பு, கன்னியாகுமரி. |
| 6. | ஸ்ரீ குருஞான சம்பந்தர் உயர்நிலைப்பள்ளி, தருமபுரம், நாகப்பட்டினம். |

## நடுநிலைப் பள்ளிகள்

| | |
|---|---|
| 1. | திருவாவடுதுறை ஆதீனம் நடுநிலைப்பள்ளி, திருவாவடுதுறை, நாகப்பட்டினம். |
| 2. | திருவாவடுதுறை ஆதீனம் அம்பலவாண தேசிகர் நடுநிலைப்பள்ளி, திருவாவடுதுறை, நாகப்பட்டினம். |

## தொடக்கப் பள்ளிகள்

| | |
|---|---|
| 1. | சுவாமி நெல்லையப்பர் அன்பு ஆசிரமம் தொடக்கப்பள்ளி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி. |
| 2. | சங்கரநாராயணசுவாமி திருக்கோயில் தொடக்கப்பள்ளி, சங்கரன்கோவில், தென்காசி. |
| 3. | ஸ்ரீ மெய்கண்டார் தொடக்கப்பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம். |
| 4. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் தொடக்கப்பள்ளி, பழநி, திண்டுக்கல். |
| 5. | திருவாவடுதுறை ஆதீனம் தொடக்கப்பள்ளி, திருவிடைமருதூர், தஞ்சாவூர். |

| | |
|---|---|
| 6. | திருஞான சம்பந்தர் தொடக்கப்பள்ளி, தருமபுரம், நாகப்பட்டினம். |
| 7. | அருள்மிகு சுந்தரராஜா தொடக்கப்பள்ளி, அழகர்கோயில், மதுரை. |
| 8. | அஞ்சுகம் தொடக்கப்பள்ளி, கோடம்பாக்கம், சென்னை. |

## மெட்ரிகுலேஷன் பள்ளிகள்

| | |
|---|---|
| 1 | பழநி ஆண்டவர் மெட்ரிகுலேஷன் பள்ளி, பழநி, திண்டுக்கல். |
| 2 | காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை |

## சி.பி.எஸ்.இ. பள்ளி

| |
|---|
| பராசக்தி வித்யாலயா, குற்றாலம், தென்காசி. |

## நாதஸ்வரம் மற்றும் தவில் இசைப்பயிற்சிப் பள்ளிகள்

| | |
|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி, திண்டுக்கல். |
| 2. | அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம், தஞ்சாவூர். |

## அர்ச்சகர் பயிற்சி பள்ளிகள்

| | |
|---|---|
| 1. | அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி. |

| | |
|---|---|
| 2. | அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை. |
| 3. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை. |
| 4. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி, திண்டுக்கல். |
| 5. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர், தூத்துக்குடி. |
| 6. | அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை |

## வேத ஆகம பாடசாலைகள்

| | |
|---|---|
| 1. | அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை. |
| 2. | அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி. |
| 3. | அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை. |

## ஓதுவார் பயிற்சி பள்ளிகள்

| | |
|---|---|
| 1. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை. |
| 2. | அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை. |

## தேவார பயிற்சி பள்ளிகள்

| | |
|---|---|
| 1. | தருமபுர ஆதீனம், தருமபுரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம். |
| 2. | மருதநாயக முதலியார் அன்னபூரணி அம்மாள் டிரஸ்ட், கோயம்புத்தூர். |

## காது கேளாதோர் – பேச இயலாதோர் பள்ளி

| |
|---|
| அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி, திண்டுக்கல். |

## காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை

102. சென்னையில் உள்ள காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்குச் சொந்தமான 32 கிரவுண்டு நிலம் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் 13.06.2021 அன்று திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. இவ்விடத்தில் செயல்பட்டு வந்த சீதா கிங்ஸ்டன் ஹவுஸ் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி திடீரென்று தனது செயல்பாட்டை நிறுத்திக் கொண்டதால், பள்ளியில் பயின்று வந்துள்ள மாணவ மாணவியரின் நலனையும், பணிபுரிந்து வந்துள்ள ஆசிரியர்கள்

மற்றும் ஊழியர்களின் நலனையும் கருத்தில் கொண்டு, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் பள்ளியின் நிருவாகப் பொறுப்பை, திருக்கோயிலே தன்வசம் எடுத்துக் கொள்ளுமாறு ஆணை பிறப்பித்தார். தற்போது இப்பள்ளி காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு திருக்கோயிலின் பொறுப்பில் திறம்படச் செயல்பட்டு வருகிறது.

**ஓதுவார் பயிற்சி பள்ளிகள்**

103. இப்பயிற்சி பள்ளியில் சேரும் மாணவர்கள் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 13 வயது நிரம்பி இருத்தல் வேண்டும். அதிகபட்சம் 20 வயதிற்கு மேற்படாமல் இருக்கவேண்டும். பயிற்சியில் சேரும் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/–வீதம் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**சமூக நல நிறுவனங்கள்**

104. திருக்கோயில்கள், வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாது சமூக நோக்கத்தோடு முதியோர்

இல்லங்கள், மருத்துவமனைகள் போன்றவற்றை நடத்தும் அறநிலையங்களாகவும் செயல்பட்டு வருகின்றன. 32 கருணை இல்லங்கள், 2 முதியோர் இல்லங்கள், 6 சித்த மருத்துவமனைகள், 2 ஆங்கில முறை மருத்துவமனைகள் மற்றும் ஒரு மனநலக் காப்பகம் ஆகியன திருக்கோயில்களால் நடத்தப்பட்டுவருகின்றன.

**பள்ளி, கல்லூரிகளுக்கு அடிப்படை வசதிகள்**

105. இந்து சமய அறநிலையத்துறை ஆளுகையின் கீழ் இயங்கும் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருவதற்கு, நிதிவசதிமிக்க திருக்கோயில்களிடமிருந்து உபரி நிதியை பெற்று, 10.00 கோடி ரூபாய் அளவிலான ஒரு மூலதன நிதி உருவாக்கப்படும். இம்மூலதன நிதியிலிருந்து கிடைக்கப்பெறும் திரள் வட்டித் தொகையினைக் கொண்டு கட்டடங்கள், ஆய்வுக் கூடங்கள், நூலகங்கள், கணினிகள், குடிநீர் மற்றும் கழிப்பறைகள் போன்ற வசதிகள் செய்து தரப்பட்டு வருகின்றன.

**'கோசாலைகள்' (பசு பாதுகாப்பு மையங்கள்)**

106. திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெறும் கால்நடைகளைப் பராமரிக்க ஒருங்கிணைந்த கோசாலைகள் பழநி, திருச்செந்தூர், ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம் ஆகிய நான்கு இடங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. திருக்கோயில்களால் நன்கொடையாக பெறப்படும் உபரி கால்நடைகள், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும், திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கும், பூசாரிகளுக்கும் விலையின்றி வழங்கப்படுகின்றன. இக்கோசாலைகளை நல்ல முறையில் பராமரிக்க சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது.

## IX – அருளாளர்கள் விழா

**'சேக்கிழார் விழா'**

107. இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் தெய்வச் சேக்கிழார் பிறந்த இடமான சென்னைக்கு அருகில் உள்ள குன்றத்தூரில், சேக்கிழார் திருநட்சத்திரத்தன்று, ஆண்டுதோறும் சேக்கிழார் விழா அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இந்த விழாவிற்கு இதற்கென ஏற்படுத்தப்பட்ட மூலதன நிதி

வட்டியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது. சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலிலும் ஆகஸ்ட் திங்கள்தோறும் 12 நாட்களுக்கு 'பன்னிரு திருமுறை விழாவும்', 'சேக்கிழார் விழாவும்' கொண்டாடப்படுகின்றன.

**'திருஞானசம்பந்தர் இசை விழா'**

108. சிறந்த சமய அருளாளரான திருஞானசம்பந்தரைப் போற்றும் வகையில் செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில் திருஞானசம்பந்தர் இசை விழா ஆண்டுதோறும் 'வைகாசி' மாதம் 'மூல' நட்சத்திர தினத்தன்று கொண்டாடப்படுகிறது. இதற்கான செலவு பொதுநல நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

**'ஔவையார் விழா'**

109. நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், துளசியாப்பட்டினம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு விசுவநாதசுவாமி திருக்கோயில் வளாகத்தில் தமிழ் மூதாட்டி ஔவையார் கோயில் கொண்டுள்ளார். இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும்

'பங்குனி' மாதம் 'சதய' நட்சத்திரத்தன்று ஔவையார் விழா கொண்டாடப்படுகிறது. ஆண்டுதோறும் துளசியாப்பட்டினத்தில் நடைபெறும் இந்த விழாவிற்கு இதற்கான மூலதன நிதி வட்டியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது.

**'தாயுமானவர் விழா'**

110. தமிழ் ஞானப் பாடல்களை உலகிற்கு அருளிய தாயுமானவ அடிகளைப் போற்றும் வகையில் தாயுமானவர் விழா திருச்சிராப்பள்ளி, மலைக்கோட்டை, அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயிலில் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.

**'திருவள்ளுவர் திருநாள்'**

111. ஒவ்வொரு ஆண்டும் திருவள்ளுவர் பிறந்த நாளாக நம்பப்படும் தைத் திங்கள் இரண்டாம் நாளன்று சென்னை, மயிலாப்பூரில் அமைந்துள்ள தெய்வப்புலவர் திருவள்ளுவர் திருக்கோயிலில் "திருவள்ளுவர் திருநாள்" கொண்டாடப்படுகிறது. இவ்விழாவின்போது பள்ளி

மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி, ஒப்புவித்தல் போட்டி, கட்டுரைப்போட்டி நடத்தப் பெற்று பரிசுகள் வழங்கப்படுகின்றன.

**'அருணகிரிநாதர் விழா'**

112. அருளாளர் அருணகிரிநாதருக்கு திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலில் 'ஆவணி' மாதம், 'கேட்டை' நட்சத்திரத்தன்று "முக்திப்பேறுவிழா" ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. மேலும், திருவண்ணாமலையில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் அருணகிரிநாதர் மணி மண்டபம் கட்டப்பட்டு வருகிறது.

**'கோச்செங்கட்சோழ நாயனார் விழா'**

113. அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான அருட்திரு கோச்செங்கட்சோழ நாயனார் அவதரித்த திருநாளான 'மாசி' மாதத்தில், 'சதய' நட்சத்திரத்தன்று ஆண்டுதோறும் "கோச்செங்கட் சோழ நாயனார் விழா"

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவானைக்காவல், அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரர் திருக்கோயிலில் கொண்டாடப்படுகிறது.

**'ஆழ்வார்கள் விழா'**

114. ஆண்டுதோறும் பன்னிரு ஆழ்வார்களுக்கும் அவரவர் திருநட்சத்திர நாளில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் "ஆழ்வார்கள் விழா" சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

**'பாவை விழா'**

115. ஆண்டு தோறும் 'மார்கழி' திங்களில் திருப்பாவை, திருவெம்பாவை ஒப்புவித்தல் போட்டிகள் திருக்கோயில்களில் நடைபெறுவது வழக்கத்தில் உள்ளது. பாவை விழா மாவட்ட அளவில் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. ஐந்தாம் வகுப்பு வரை, ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை மற்றும் ஒன்பது முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரையிலான பல்வேறு பிரிவுகளில் திருப்பாவை, திருவெம்பாவை பண்ணோடு பாடும் போட்டி, கட்டுரைப் போட்டி என தனித்தனியாக போட்டிகள் நடத்தப்படுகின்றன.

## X - வெளியீடுகள்

### 'தலவரலாறு' மற்றும் 'தலபுராணம்'

116. திருக்கோயில்களின் புராண மரபுகளுக்கேற்ப அதன் தொன்மை, வரலாறு முக்கியத்துவம், காவியங்கள், புராணங்கள், கட்டடக் கலை, கல்வெட்டுச் செய்திகள், வழிபாட்டுச் சிறப்புகள் பற்றிய செய்திகளை உள்ளடக்கி தலவரலாறும், தலபுராணமும் நூல்களக வெளியிடப்படுகின்றன. சிறு திருக்கோயில்களுக்கு அவற்றின் வழிபாட்டுச் சிறப்புகளை அறிந்து கொள்ள ஏதுவாக தகவல் அட்டைகளும் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன.

### பயணியர் மாவட்ட கையேடுகள்

117. ஆன்மிக பயணம் மற்றும் திருத்தல சுற்றுலாவிற்கு வரும் பக்தர்களுக்கு வழிகாட்டும் நோக்கத்தில் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள திருக்கோயில்கள் பற்றிய விவரங்கள், தலவரலாற்றுக் குறிப்புகள் மற்றும் சுற்றுப்புறத்திலுள்ள திருக்கோயில்கள் தொடர்பான விவரங்களையும் சேகரித்து அனைத்து மாவட்டங்களுக்கும் தனித்தனியே பயணியர் கையேடுகள் வெளியிடப்பட்டுள்ளன. இத்தகைய கையேடுகள்

பக்தர்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வழிகாட்டி என்பதைக் கருத்தில் கொண்டு இவை, இந்து சமய அறநிலையத்துறை வலைதளத்திலும் பதிவேற்றப்பட்டுள்ளன.

**"திருக்கோயில்" திங்களிதழ்**

118. இந்து சமய அறநிலையத்துறையால் 1958 ஆம் ஆண்டு முதல் "திருக்கோயில்" என்ற பெயரில் திங்களிதழ் வெளியிடப்படுகிறது. இந்த மாத இதழ் தலைசிறந்த எழுத்தாளர்களின் கட்டுரைகள், துணுக்கு செய்திகள் மற்றும் ஆன்மிக வினாவிடைகள் என எழில்மிகு வண்ணங்களுடன் வெளியிடப்படுகின்றன. சந்தாதாரர்கள் பயனடையும் வகையில் இணைய வழியாக (online) சந்தா செலுத்தி இவ்விதழை பெறுவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**'ஆகம நூல்கள்' மற்றும் இதர நூல்கள் தமிழில் வெளியிடுதல்**

119. வடமொழி ஆகம சாஸ்திர நூல்களும், சிற்ப சாஸ்திர நூல்களும் தமிழர்கள் அறிந்து கொள்ளும் வகையில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அந்த வகையில் "உத்ரகாமிக

ஆகமம்'' மற்றும் "குமார தந்திரம்'' ஆகிய நூல்கள் தமிழில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு வெளியிடப்பட்டன. மேலும் "இந்து மத இணைப்பு விளக்கம்", "சைவமும் வைணவமும்" மற்றும் "ஆலய நிர்மாண பிம்பலட்சண சிற்ப நூல்" ஆகிய தமிழ் நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

## XI - பயிற்சி திட்டங்கள்

### புத்தொளிப் பயிற்சி

120. திருக்கோயில்களில் பணிபுரியும் 'அர்ச்சகர்கள்', 'பட்டாச்சாரியார்கள்', 'ஓதுவார்கள்' தங்கள் பணிகளைத் திறம்பட செய்திட ஏதுவாக 1991–ஆம் ஆண்டு "புத்தொளிப் பயிற்சி திட்டம்" தொடங்கப்பட்டது. திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் இறையுணர்வை மதித்து வழிபாட்டு முறைகளைக் கனிவோடு செய்திட திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களுக்கும் இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

### 'யோகாசன' வகுப்புகள்

121. பொதுமக்களின் / இறை அன்பர்களின் உடல் மற்றும் மனநலத்தை முறையாகப் பேணிவரும் பொருட்டு, போதிய நிதிவசதியும் இடவசதியும்

கிடைக்கக்கூடிய, தூய்மையான மற்றும் காற்றோட்டமான இடங்களில், பயிற்சியும் தகுதியும் பெற்றுள்ளவர்களைக் கொண்டு ஒவ்வொரு நாள் காலையிலும், 52 திருக்கோயில்களில் தியான வகுப்புகளும், யோகாசனப் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

## XII - திருக்கோயில் பணியாளர்களுக்கான நலத்திட்டங்கள்

### நலத்திட்ட விவரங்கள்

122. இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களின் பணியாளர்கள் பல்வேறு வகையினத்தில் பணிபுரிகின்றனர். இவர்களது நலன் காத்திட ஏற்படுத்தப்பட்ட திட்டங்கள் பின்வருமாறு:–

**நலத்திட்ட விவரங்கள்**

| வ. எண். | திட்டத்தின் பெயர் |
|---|---|
| 1. | குடும்ப நல நிதித் திட்டம் |
| 2. | மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் |
| 3. | திருக்கோயில் பணியாளர்கள் நல நிதித் திட்டம் |
| 4. | கருணை அடிப்படையில் பணி நியமனம் |

| | |
|---|---|
| 5. | அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணர், அரையர், திவ்யப்பிரபந்தம் பாடுவோர், இசைக்கலைஞர்கள் ஆகியோருக்கான ஓய்வூதியத் திட்டம் |
| 6. | திருக்கோயிலில் பணிபுரியும் இதர பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் |
| 7. | திருக்கோயில் பணியாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் திட்டம் |

## குடும்ப நல நிதி திட்டம்

123. பணியிலிருக்கும்போது இயற்கை எய்திய திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்காக "குடும்ப நல நிதி திட்டம்" ஏற்படுத்தப்பட்டது. திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து இதற்கென ரூ.15.00 கோடி மூலதன நிதி உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, பணியிலிருக்கும்போது இயற்கை எய்திய பணியாளரின் வாரிசுதாரர்களுக்கு ரூ.3 இலட்சம் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

## திருக்கோயில் பணியாளர்கள் நல நிதி

124. நிதிவசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து 6.5 கோடி ரூபாய் பெறப்பட்டு "திருக்கோயில் பணியாளர்கள் நல நிதி" என்ற ஒரு மூலதன நிதி உருவாக்கப்பட்டுள்ளது. ஆண்டு

வருவாய் 1 இலட்ச ரூபாய்க்குக் குறைவாக உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களில் 750 ரூபாய்க்கும் குறைவாக மாத ஊதியம் பெறுகின்றவர்களின் ஊதிய நிலுவைத் தொகை மேற்கண்ட மூலதன நிதியிலிருந்து கிடைக்கும் திரள் வட்டித் தொகையிலிருந்து ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. மேலும், ஆண்டு வருவாய் 1 இலட்சம் ரூபாய் மற்றும் அதற்கு மேலாக உள்ள திருக்கோயில்களில் பணியாற்றி ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு, அவர்கள் தங்களது சேவைக் காலத்தின் போது செலுத்தி வந்துள்ள சந்தா தொகையுடன் ரூ.5,000/-மும் சேர்த்து சிறப்பு வருங்கால சேமநல நிதி வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இந்த மூலதனத்திலிருந்து பெறப்படுகின்ற திரள் வட்டித் தொகையினைக் கொண்டு திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் இசைவாணர்களுக்கு ஊதிய நிலுவைத் தொகைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

**கருணை அடிப்படையில் பணிநியமனம்**

125. திருக்கோயில்களில் பணியாற்றும்போது, இயற்கை எய்திய திருக்கோயில் பணியாளர்களின்

வாரிசுதாரர்களுக்கு "கருணை அடிப்படையில் பணிநியமனம்" செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு**, திருக்கோயில்களில் பணியின்போது இறந்த 11 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

**இசைவாணர்கள் நியமனம்**

126. திருக்கோயில்களில் திருவிழாக்களின்போது மங்கல இசை இசைக்கப்படுவது வழக்கம். இந்த நோக்கத்திற்காக, அந்தந்த திருக்கோயில்களில் போதிய எண்ணிக்கையிலான இசைக்கலைஞர்கள் பணிநியமனம் செய்யப்படுகின்றனர்.

**'அர்ச்சகர்', 'ஓதுவார்', 'வேதபாராயணர்', 'அரையர்', 'திவ்யப்பிரபந்தம் பாடுவோர்', 'இசைக் கலைஞர்கள்' ஆகியோருக்கான ஓய்வூதியத் திட்டம்**

127. திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து, 60 வயது நிறைவடைந்து ஓய்வுபெற்றுள்ள அர்ச்சகர்கள், ஓதுவார்கள், வேதபாராயணர்கள், அரையர்கள், திவ்யப்பிரபந்தம் பாடுவோர், இசைக் கலைஞர்கள் ஆகியோருக்கு

அரசு நல்கையிலிருந்து மாதந்தோறும் 1000 ரூபாய் ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் தற்போது 121 ஓய்வுபெற்ற பணியாளர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

## திருக்கோயிலில் பணிபுரியும் இதர பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

128. திருக்கோயில் பணியாளர்களுக்கென இருவகை ஓய்வூதியத் திட்டங்கள் 2006–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### (i) பணியாளர் சேமநல நிதித் திட்டம்

129. நிதி வசதிமிக்க திருக்கோயில்களில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் இத்திட்டம் பொருந்தக் கூடியதாகும். இத்திட்டத்தின்படி, வருங்கால சேமநல நிதித் திட்டத்தில் சேர்ந்துள்ள திருக்கோயில் பணியாளர்களில், 13.02.2006 முதல் ஓய்வுபெற பத்து ஆண்டிற்கு மேல் பணிக்காலம் உள்ளவர்கள்,

பணியாளர் சேமநல நிதித் திட்டத்தின்கீழ், ஓய்வூதியம், குடும்ப நல ஓய்வூதியம் ஆகிய பயன்களைப் பெறுவர்.

**(ii) துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம்**

130. நிதிவசதி குறைவாக உள்ள திருக்கோயில் பணியாளர்களுக்கு, பணியாளர் சேமநல நிதித் திட்டம் கொண்டு வரப்பட்ட நாளான 01.01.2006 முதல் ஓய்வுபெற பத்தாண்டிற்கு கீழ் பணிக்காலம் உள்ள பணியாளர்களுக்கும், பணியாளர் சேமநல நிதித்திட்டத்தில் சேரும் அளவு நிதி வசதியில்லாத திருக்கோயில்களில் பணியாற்றுபவர்களுக்கும், துறை நிலையிலான ஓய்வூதியம் பெறும் திட்டம் 2006–ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், இதுவரையில் 4871 பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**குடும்ப ஓய்வூதியம்**

131. துறை நிலையிலான ஓய்வூதியர் இறந்துவிட்டால், அவரது நேரடி வாரிசுதாரர்களான கணவனோ, மனைவியோ வாழ்நாள் முழுதும் பயன்பெறும் விதத்தில் 2015–ஆம் ஆண்டிலிருந்து குடும்ப ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்டு

வருகிறது. குடும்ப ஓய்வூதியத்தின் அளவு, ஓய்வூதியதாரர் இறுதியாக பெற்று வந்துள்ள ஓய்வூதியத் தொகையில் 50 விழுக்காடு அளவை கொண்டதாகும். இத்திட்டத்தின்கீழ் இதுவரையில் 118 தனியர்கள் பயனடைந்துள்ளனர்.

## XIII- கிராமக்கோயில் பூசாரிகள் நலத்திட்டம்

### கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம்

132. இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத கிராமத் திருக்கோயில்களில் பூசை செய்யும் பூசாரிகளுக்கு 'கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம்' ஒன்று உருவாக்கப்பட்டு அதன் மூலமாக உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### கிராமக்கோயில் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டம்

133. இந்து சமய அறநிலையத்துறையின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்படாத திருக்கோயில்களில், 20 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து 60 வயதினை நிறைவு செய்து ஓய்வுபெற்ற பூசாரிகளுக்கு கிராமக்கோயில் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாத ஓய்வூதியமாக

3,000 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், இதுவரையில் 3281 கிராமக் கோயில் பூசாரிகள் பயன்பெற்றுள்ளனர்.

## XIV – துறை மற்றும் திருக்கோயில்களின் செயல்பாடுகளை கணினிமயமாக்குதல்

134. திருக்கோயிலில் வழிபடுவோருக்கான சேவைகள் தொடர்பான விவரங்கள் மற்றும் திருக்கோயில் நிருவாகம் மேம்பாடு ஆகியவற்றிற்கான ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு வலை முகப்பு (Intergrated Temple Management System) இத்துறையால் தயாரிக்கப்பட்டு வருகிறது. தங்கும் அறைகள் பதிவு செய்வதற்கும், தங்கரதம் இழுப்பதற்கான பதிவு செய்வதற்கும், அதற்கான இரசீதுகளை இணையவழி மூலம் பெறுவதற்கும் கைபேசி செயலி உருவாக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள தொன்மையான திருக்கோயில்களில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வடிவமைக்கப்பட்ட விலை மதிப்பற்ற உலோக விக்கிரகங்கள், கற்சிலைகள் மற்றும் நிலம், கட்டடம் போன்ற அசையா சொத்துக்கள் பற்றிய அனைத்து விவரங்களும் கணினிமயமாக்கப்பட்டு

திருக்கோயில்களுக்கான தகவல் தொகுப்பு உருவாக்கப்பட்டு வருகிறது. தேசிய தகவல் மையத்தின் (National Informatic Centre) உதவியுடன் திருக்கோயில் சொத்துக்களின் அமைவிடங்கள் புவியியல் தகவல் முறைமை (Geographic Information System) மூலம் எளிதாக அறியும் வகையில் வரைபடங்களில் குறிப்பிடுதல், புவியிடங்காட்டி (Global Positioning System) மூலம் திருக்கோயில் சொத்துக்கள் முறையாக அளவை செய்து ஆவணப்படுத்தப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த திருக்கோயில் மேலாண்மை அமைப்பின் வழியாக, திருக்கோயில்கள் தொடர்பான பின்வரும் கணினி தொகுதி உருவாக்கப்பட்டுள்ளன:–

I. திருக்கோயில் குறித்த பொதுத் தகவல்
II. சொத்துப்பதிவேடுகளின் பதிவேற்றம் (7 மற்றும் 7A)
III. வரவு – செலவுத் திட்டங்களையும் ( நிதி நிலை அறிக்கைகளையும்) கணக்குத் தணிக்கை அறிக்கைகளையும் பதிவேற்றுதல்.
IV. திருக்கோயிலில் பல்வகைப்பட்ட சேவைகளுக்கான இணைய வழிப் பதிவு

V. மாற்றம் செய்யப்பட்டுள்ள நிலச் சொத்து குறித்த தகவல்

VI. 'திருப்பணி' கணினித் தொகுதி (பணி முன்னேற்ற அடிப்படையில்)

VII. கட்டணமில்லா மற்றும் கட்டணம் செலுத்தி தரிசனம் செய்வதற்கான முன்பதிவுகள், இணைய வழியிலான நன்கொடைகள் ஆகியவற்றிற்கான மின்னணு சேவைகள்

VIII. அன்னதானத்திற்கும் பொது நோக்கங்களுக்குமான இணைய வழி நன்கொடை.

IX. நீதிமன்றத் தொகுப்பு

X. கைபேசி செயலி ஒருங்கிணைப்பு

XI. புவியியல் தகவல் அமைப்பு ஒருங்கிணைப்பு

XII. அழைப்பு மையம்

XIII. இணைய வழி குறை தீர்க்கும் பிரிவு

XIV. திருக்கோயில் சொத்தின் மீதான வருவாய் (கேட்பு, வசூல், நிலுவை)

XV. மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் (பழநி திருக்கோயிலில் செயல்படுத்தப்பட்டுள்ளது)

XVI. அன்னதானத் தொகுப்பு

XVII. திருக்கோயில் வரவு செலவுகள்

XVIII. ஓய்வு பெற்ற பணியாளருக்கு வழங்கப்படும் ஓய்வூதியம்

## நிறைவுரை

**"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்**

**மடிகற்றுத் தான்முந் துறும்".**

'குடிகள் உயர பாடுபடுபவர் கோயிலுக்கு செல்ல வேண்டிய தேவையில்லை. அவனைத் தேடி தெய்வம் தோள் பட்டைத் துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டு உனக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று தோன்றாத் துணையாக உதவிக்கு நிற்கும்' என்று தெய்வப்புலவர் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

இவ்வரசு பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் திருக்கோயில்களையும் அவற்றின் சொத்துக்களையும் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் வெளிப்படைத் தன்மையுடன் தீவிர முனைப்புடன் செயல்படுகிறது. செம்மொழியாம் செந்தமிழ் மொழிக்கு திருக்கோயில்களில் உரிய இடத்தினை நிலைநாட்டிட மிகுந்த ஈடுபாட்டுடன் இத்துறை திறம்பட செயலாற்றி வருகிறது. இந்தியத் திருநாடே போற்றும் வண்ணம் ஏழை எளிய

அடித்தட்டு மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு திருக்கோயில்களில் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு இத்துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**பி.கே. சேகர்பாபு**
இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை
அமைச்சர்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இந்து சமய அறநிலையத் துறையால் நடத்தப்படும் அர்ச்சகர் பயிற்சி பள்ளிகளில் பயிற்சி முடித்த 22 அர்ச்சகர்களுக்கு 14.08.2021 அன்று பணி நியமன ஆணைகளை வழங்கினார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், தவத்திரு சாந்தலிங்க மருதாச்சல அடிகளார், டாக்டர் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். சந்தர மோகன். B, இ.ஆ.ப. ஆகியோருடன் புதிதாக நியமிக்கப்பட்ட அர்ச்சகர்கள்.

||




சென்னை, இந்து சமய அறநிலையத்துறை ஆணையரகத்தில் 07.08.2021 அன்று "கலைஞர் தலமரக்கன்றுகள் நடும் திட்டம்" குறித்த பதாகையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.



"கலைஞர் தலமரக்கன்றுகள் நடும் திட்டத்தின்" கீழ் திருக்கோயில்களில் 1 இலட்சம் தலமரக்கன்றுகள் நடும் திட்டத்தை தொடங்கி வைக்கும் அடையாளமாக சென்னை, இந்து சமய அறநிலையத்துறை ஆணையரக வளாகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 07.08.2021 அன்று நாகலிங்க மரக்கன்றை நட்டு தொடங்கி வைத்தார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ் போற்றி புத்தகங்களை 12.08.2021 அன்று வெளியிட்டார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் திருக்கோயிலில் பணிபுரியும் பூசாரிகள், அர்ச்சகர்கள், பட்டாச்சாரிகளுக்கு ரூ.4000/- நிதியுதவி, 10 கிலோ அரிசி மற்றும் 15 மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பை 03.06.2021 அன்று வழங்கினார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் திருக்கோயில்களில் "அன்னைத் தமிழில் அர்ச்சனை" என்ற அறிவிப்பு பதாகையினை 03.08.2021 அன்று வெளியிட்டார்.




மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் சென்னை, ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் கோவிட் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கும், அவர்களுடன் இருப்பவர்களுக்கும் உணவுப் பொட்டலங்களை 01.06.2021 அன்று வழங்கினார்.



முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின்
தலைமையில் 12.12.2009 அன்று நடைபெற்ற உயர்நிலை ஆலோசனைக் குழு கூட்டம்



முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் ஒரு கால பூஜைத் திருக்கோயில்களின் அர்ச்சகர் / பூசாரிகளுக்கு இலவச மிதிவண்டி 18.08.2010 அன்று வழங்கப்பட்டது.



ஆழித்தேர் திருவிழா, திருவாரூர்